பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 06 வெள்ளிக்கிழமை 19.02.2021 கதிர் 106

### இனி அது ரகசியம் அல்ல!

ஆளும் பொதுஜன பெரமுன கூட்டணிக்குள் நீடிக்கும் இழுபறி – முரண்பாடு – சிக்கல்களுக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் சூத்திரம் என்னவென்று தேடிப்பார்த்தேன். ஆச்சரியமாக இருந்தது

அதனைப் புரிந்து கொள்வதற்கு நான்

பக்கம்02 »

# ‘எலறா’ கடற்படைத்தளம் அமைக்க மீண்டும் இன்று காலை காரைநகரில் காணி அளவீடு

## தடுத்து நிறுத்த ஒன்றிணையுமாறு அழைப்பு

யாழ்.காரைநகர் பகுதியில் கடற்படைத்தளம் ஒன்றை அமைப்பதற்கு 50 ஏக்கருக்கும் அதிகமான காணிகள் இன்று காலை 9.30 மணிக்கு அளவீடு செய்யப்படவுள்ளது.

காரைநகர் ஜே.45 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 61 தனியார் குடும்பங்களுக்குச் சொந்தமான 51 ஏக்கர் அளவுடைய காணி இவ்வாறு நில அளவைத் திணைக்கள்தினரால் அளவீடு செய்யப்படவுள்ளது.

கடந்த காலங்களில் மயிலிட்டிப் பகுதி மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்ட நீலங்காடு பகுதி கடற்படையினரின் ஆக்கிரமிப்பால் மீன்பிடி நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தன. இந்நிலையில், எலறா கடற்படைத்தளத்துக்காகத் தனியாருக்குச் சொந்தமான நீலங்காடுப் பகுதியில் உள்ள 51 ஏக்கர் காணி கையகப்படுத்தும் நோக்கில் இன்று

☞2

# பளையில் பல ஏக்கர் காணிகளை சீனாவுக்கும் சிங்களவர்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை

## அம்பலப்படுத்தினார் முன்னாள் எம்.பி. சுரேஷ்




(எஸ்.நிதர்ஷன்)

கிளிநொச்சி மாவட்டம், பளை பகுதியில் பல ஏக்கர் காணிகளை சீன நிறுவனம் ஒன்றுக்கும், சிங்கள வர்த்தகர்களுக்கும் வழங்கும் நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சுரேஷ் பிறேமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

☞11

# யாழ்ப்பாணத்தில் திருடர்கள் மூவர் உட்பட ஐவர் சிக்கினர்!

## 8 பவுண் தங்க நகைகள் உள்ளிட்ட கொள்ளையிட்ட பொருள்களும் மீட்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகரில் மூன்று இடங்களில் கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபட்ட மூவர் உட்பட ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று

☞2

# பேரணியில் பங்கேற்ற இளைஞர் பருத்தித்துறையில் நேற்று கைது

## வாக்குமூலம் பதிவு செய்த பின் விடுவிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் பங்கேற்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

பருத்தித்துறையில் பேரணி இடம்பெற்ற வேளை அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் இலக்கத்தை வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நேற்று பிற்பகல் கைதுசெய்தனர்.

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் பங்கேற்ற குற்றச்சாட்டில்

☞2

# மேலும் 501 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் மேலும் 501 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 78 ஆயிரத்து 420 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த வாரங்களாக 750 முதல் 950 பேர்

☞2

# யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் முல்லைத்தீவுக்கு நேற்று பயணம்

## மாவட்ட மேலதிக அரச அதிபருடன் சந்திப்பு



(சண்முகம் தவசீலன்)

யாழ். இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் நேற்று மாலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்குப் பயணம் மேற்கொண்டார்.

மாவட்ட செயலகத்தில் வைத்து அவரை மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் எம்..கிருபாசுதன் ஆகியோர் வரவேற்றனர். அதைத் தொடர்ந்து நட்பு ரீதியான கலந்துரையாடலில்

☞2

# இருவேறு குற்றச்சாட்டுக்களில் கிளிநொச்சியில் 8 பேர் கைது!

கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் இரு வேறு குற்றச்சாட்டுக்களில் 8 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி பகுதியில்

☞2

# இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்ற முடியாவிடின் பட்டமளிப்பைப் பிற்போடுக!

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு சுகாதார சேவை பணிப்பாளர் ஆலோசனை





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவை இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்துவதில் சிரமங்கள் ஏதாவது இருப்பின் நிகழ்வைப் பிற்போட்டு, கொரோனா நிலைமைகள் சீரடைந்த பின் பிறிதொரு நாளில் நடாத்தலாம்.

– இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 24, 25 ஆம்

☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சொல்லப்போகும் ஒரு தகவலை நீங்கள் நம்ப வேண்டும்.

ஏற்கனவே கடந்த மாத இறுதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நான் நேரில் சந்தித்து சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேல் உரையாடியமை குறித்து சில தகவல்களை இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன். எனது கருத்து வெளிப்பாட்டில் வரிகளுக்கு இடையில் – அச்சில் வராமல் – பூடகமாக நான் ஜாடை காட்டிய ஒரு விடயத்தை வாசர்கள் பலரும் புரிந்து கொண்டார்கள் என்ற பின்னூட்டலை நான் அறிந்திருந்தேன். அதுதான் விடயம்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இப்போது வயது 75 தாண்டி விட்டது. கம்பீரமாக – முழு அதிகாரத்துடன் – வீச்சாக – தாம் அரசியல் நடத்திய காலம் தாண்டியாகி விட்டது என்ற யதார்த்தத்தை அவர் புரிந்து கொண்டிருக்கின்றார். தனது தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுதிரண்ட அரசியல் தரப்புகளை அரசியலில் உச்ச இடத்துக்குக் கொண்டு வரவேண்டிய கடப்பாட்டையும் தாம் செவ்வனே நிறைவேற்றியிருக்கின்றார் என்ற திருப்தியும் அவருக்கு உள்ளது.

இந்த நிலையில் ஒரு மதிப்பார்ந்த அரசியல் தலைவனாக – ஒரு Statesman ஆக – ஜே.ஆர்.ஜெயர்த்தனா, நெல்ஸன் மண்டேலா போன்று – அரசியலில் இருந்து கௌரவத்துடன் ஒதுங்க வேண்டும் என்று அவர் கருதுகின்றார். அவரின் விருப்பம் அதுவே. அதற்கான வேளை நெருங்குகின்றது என அவர் கருதுகின்றார் என நம்பகரமாக அறிய முடிந்தது. அது, அடுத்த ஓரிரு மாதங்களில் இடம்பெற்றால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதுதான் உண்மை நிலைமை.

அவர் திடுதிப்பென அரசியலிலிருந்து ஒதுங்கினால், அந்த இடத்தை இப்போது நேரடி அரசியலில் அஞ்ஞாதவாசம் செய்தபடி – பின்னாலிருந்து விடயங்களை இயக்கிவரும் – பஸில் ராஜபக்ஷ கைப்பற்றி விடுவாரே என்ற பயம் அல்லது பீதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சூழ இப்போது நிற்கும் சிலருக்கு ஏற்பட்டு விட்டது.

அரசுக்குள் நேரடியாகப் பிரசன்னம் தராமல் நிழலாக இருந்து விடயங்களைச் செயற்படுத்தும் பஸிலுடன்தான் விமல் வீரவன்ஸக்கள், உதய கம்மன்பில்லக்கள் இப்போது அரசியல் சமர் செய்கின்றார்கள். அதாவது நிழல் யுத்தம் நடத்துகின்றார்கள்.

பொதுஜன பெரமுனவின் தலைவர் பதவியைத் திடீரென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விட்டு விலகினால் அது, அந்தக் கட்சியை உருவாக்கி, நிலை நிறுத்தி, இப்போது பின்னால் நின்று, இயக்கி வரும் பஸிலின் கைக்கு கேள்விக்கு இடமின்றி மாறிவிடும். அவர் பிரதமர் பதவியையும் கைப்பற்றி விடுவார். இரண்டும் நடந்தால் ஆளுங்கட்சிக் கூட்டுக்குள்ளும், அரசுக்குள்ளும் தங்கள் நிலைமை கடைசியில் துந்தனாதான் என்று புரிந்து கொண்ட வீரவன்ஸக்களும், கம்மன்பில்லக்களும் அதனால் இப்போது பொங்கிச் சீறுகின்றனர்.

அதனால்தான், பொதுஜன பெரமுன கூட்டணியின் தலைமைப் பதவியை இப்போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடமிருந்து பிடுங்கி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வழங்கி விட வேண்டும் என்று அவர்கள் துடிக்கின்றனர். பஸில் ராஜபக்ஷவின் கைகளுக்கு அப்பதவி போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் அவர்களின் ஒரே குறிக்கோள். அதனால்தான் இந்தக் குழப்பங்கள், களேபரங்கள் எல்லாம்.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டிருப்போர் அரசியல் பதவிகளை வகிப்பதற்கு இடமளிப்பதில்லை என்ற சட்ட ஏற்பாட்டைத் தாம் மீளவும் கொண்டுவருவார் என இருபதாவது அரசமைப்புத் திருத்த ஏற்பாடுகளை முன்னெடுத்த சமயம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தங்களுக்கு உறுதிமொழி தந்தார் என்று இப்போது உதயகம்மன்பில மீள நினைவூட்டுவது கூட, இந்தப் பின்னணியில்தான். அமெரிக்கப் பிரஜாவுரிமை வைத்திருக்கும் பஸிலுக்கு பிரதமர் பதவியை தப்பித் தவறியும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கி விடக்கூடாது என்ற ஞாபகமூட்டல்தான் இதுவும் கூட.

மஹிந்த ராஜபக்ஷ தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கினால், பொதுஜன பெரமுனவுக்குள் அரசியல் செய்வதற்கு பஸிலை முன்னணிக்குக் கொண்டு வருவதைத் தவிர ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வேறு மாற்றுவழி இல்லை என்றும் சில முக்கிய வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இராணுவ நிர்வாக முறைமையில் தேறிவந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தாம் மூன்றாம் தர அரசியல் செய்வதற்குப் பொருத்தமற்றவர், அதைக் கவனிக்க மிக நம்பகரமான ஓர் உறவு தேவை என்பது நன்கு தெரியும்; புரியும். அண்ணன் மஹிந்தர் இல்லாவிட்டால் தம்பி பஸில் என்ற தெரிவு மட்டுமே அவர் முன்னால் இருக்கின்றது. அதை நாடுவதைத் தவிர, வேறு இடைவெளியை அண்ணன் கோட்டாபயவுக்கு தம்பி பஸிலே விட்டு வைத்திருக்கப் போவதில்லை என்பதும் நாம் புரிந்து கொள்ளக் கூடியதுதான்.

பஸிலை முன்னிலைப்படுத்துவதன் காரணமாக விமல், கம்மன்பில்ல – சில சமயம் வாசுதேவ நாணயக்கார போன்றோரும் கூட – ஆட்சிக் கட்டமைப்புக்குள் இருந்து வெளியே வர எத்தனிக்கலாம். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், எதிரணித் தரப்பில் இருக்கும் சிறுபான்மைத் தரப்புக் கட்சிகளின் ஆதரவை வளைத்துப் போடும் சாணக்கியமும், தந்திரமும் பஸிலிடம் தாராளமாக இருக்கின்றன என்பதும் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு விளங்கும். அதுவும் பிரதமர் பதவி என்பதைக் கையில் வைத்துக் கொண்டு இவற்றை எல்லாம் சாதிப்பது பஸிலுக்கு தும்புமுட்டாசி வேலை என்பதை கோட்டா அறிவார்.

பிரதமர் மஹிந்தர் அரசியலில் இருந்து ஒதுங்க முற்பட்டால் ஆட்சிக் கூட்டமைப்புக்குள் பெரும் பூகம்பமே வெடிக்கும் என்ற மாதிரி 'ஸ்டண்ட்' காட்டுவதன் மூலமாவது, மஹிந்தவின் ஓய்வைத் தள்ளிப் போட வைத்து, பஸிலின் மீள் அரசியல் பிரவேசத்தையும் தற்காலிகமாகவேனும் தடுக்க முடியாதா என்ற ஆதங்கம் விமல், கம்மன்பில்ல கூட்டுக்கு உள்ளது.

இத்தகைய அரசியல் இழுபறி, பின்புலத்தில் மேலும் பல அரசியல் திருக்கூத்துக்கள் அடுத்து வரும் வாரங்களில் தெற்கில் கட்டவிழும் என எதிர்பார்க்க முடியும்.

– மின்னல் –

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 8 பவுண் தங்க நகைகள் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

கொழும்புத்துறையில் உள்ள வீடொன்றுக்குள் அண்மையில் புகுந்த மூவரங்கிய கும்பல் அங்கு வசித்த வயோதிபர்களை மிரட்டி 8 பவுண் தங்க நகைகள் மற்றும் 2 இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டது.

இதேவேளை, அண்மையில் யாழ்ப்பாணம், மருதடி லேனில் உள்ள பூட்டியிருந்த வீட்டை உடைத்து இலத்திரனியல் உபகரணங்கள் திருட்டுப் போயிருந்தன.

அத்துடன் அண்மையில் இரவு வேளை அரியாலை துண்டியில் உள்ள கடைகள் இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயிருந்தன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

அவை தொடர்பில் பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தடயங்களின் அடிப்படையில் பாசையூர், குருநகர் மற்றும் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் வசிக்கும் 23 தொடக்கம் 40 வரையிலான மூவர் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் மூவரிடமும் நகை மற்றும் பொருள்களை வாங்கிய குற்றச்சாட்டில் மேலும் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 8 தங்கப் பவுண் நகைகள் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் ஐவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இன்று அவர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## இறுக்கமான நடைமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில், பட்டமளிப்பு நிகழ்வை கடுமையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்துமாறு கோரி, அந்த நடைமுறைகளைப் பட்டியலிட்டு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் வருமாறு:–

நாட்டில் எழுந்துள்ள கொரோனா பரவல் அபாயத்தை அடுத்து, பரவலைத் தடுக்கும் வகையில் பொது நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அதன் அடிப்படையில், இந்த நிகழ்வு பற்றி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடனும், தொற்று நோயியல் பிரிவின் தொற்று நோயியல் நிபுணருடனும் நாம் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின், பின்வரும் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒரே அமர்வில் பங்குபற்றுபவர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை 150 ஆக மட்டுப்படுத்தப்பட வேண்டும். அதற்கேற்ற வகையில் அமர்வுகள் மீள் பட்டியலிடப்பட வேண்டும். மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் உட்பட வேறு எவரும் பல்கலைக்கழக வளாகத்தினுள் அனுமதிக்கப்படக் கூடாது.

முன்னைய அமர்வில் பங்குபற்றியவர்கள் வெளியேறிச் சென்ற பின்னர் மட்டுமே அடுத்த அமர்வுக்கு உரியவர்கள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட வேண்டும்.

மாணவர்கள் தங்களுடன் தனிப்பட்ட படப்பிடிப்பாளர்களை அழைத்து வருவதற்கு அனுமதிக்கப்படக் கூடாது.

ஒவ்வொரு அமர்வின்போதும், மண்டபத்தினுள் நுழையும் சகலரது பெயர், பாலினம், வயது, தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி, தொடர்பு இலக்கம் உட்பட்ட விவரங்கள் மண்டப நுழைவாயிலில் வைத்துப் பதிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் பதிவு செய்யப்பட்ட அந்தந்த அமர்வுக்குரிய விவரங்களை நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளித்தல் வேண்டும்.

ஒவ்வொரு அமர்வின்போதும், மண்டபத்தினுள் நுழையும் சகலருக்கும் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்பட்டு, காய்ச்சல் போன்ற நோய் நிலைகள் காணப்படின் அவர்கள் மண்டபத்தினுள் நுழைய முடியாதவாறு தடை செய்யப்பட வேண்டும்.

மண்டபத்தினுள் நுழையும் சகலரும் தமது கைகளைக் கழுவுவதற்கான வசதிகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்படுத்துவதுடன், ஒவ்வொருவரும் கைகளைக் கழுவிய பின்னர் உள் நுழைவதை உறுதிப்படுத்துவது பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

மண்டபத்தினுள் முகக்கவசம் அணிந்து உள் நுழைவதையும், தொடந்து அணிந்திருப்பதையும் உறுதிப்படுத்துவது நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

இரண்டு நபர்களுக்கிடையிலான சமூக இடைவெளியாக ஒரு மீற்றர் தூரம் பேணப்படுவதை உறுதி செய்வதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

நிகழ்வு இடம்பெறும் சுற்றாடலில் உள்ளும், வெளியும் உணவுப் பொருள்கள், நீராகாரங்கள் எந்தவொரு வடிவத்திலும் கையாளப்படுவதற்கு அனுமதியளிக்கப்படக் கூடாது.

மேலதிகமாக நிகழ்வுக்கு முறையான அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

அனுமதிக்கு மேலதிகமாக, நிகழ்வைத் திட்டமிடும் போதும், நிகழ்வின் போதும் நல்லூர் பிரதேச வைத்திய அதிகாரியின் பிரசன்னத்துடன் அவரது ஆலோசனைகளை ஏற்று, ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

இந்தச் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் சிக்கல்கள் காணப்படுமாயின் கொரோனா பெருந்தொற்று அபாயம் இயல்பு நிலைக்கு வந்த பின்னர் புதிய நாள் ஒன்றுக்கு நிகழ்வைப் பிற்போடுவது உகந்ததாகுமென ஆலோசனை வழங்கப்படுகின்றது – என்றுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட அரச அதிபர், சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் உட்பட 11 பேருக்கு இந்தக் கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(முன்னர் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்)

## 'எலறா' கடற்படைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அளவிடப்படவுள்ளது.

ஆகவே, குறித்த காணி அளவீடு செய்யும் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த இன்று காலை அப்பகுதி மக்கள் மற்றும் சிவில் சமூகத்தினர், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரை ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எலறா கடற்படைத்தளத்துக்காக நேற்றுமுன்தினம் காலை காரைநகர் இந்துக் கல்லூரிக்குச் சொந்தமான காணியை அளவீடு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பலத்த எதிர்ப்பால் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் 501 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரையிலான தொற்றாளர்கள் நாளாந்தம் அடையாளம் காணப்பட்ட நிலையில் நேற்று அந்த எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தவர்களில் 647 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 71ஆயிரத்து 823 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 6 ஆயிரத்து 176 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## இருவேறு குற்றச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

19 போத்தல் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவரும், குமாரசாமிபுரம் பகுதியில் 06 போத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

அத்தோடு புளியப்பொக்கணை, கல்லாறு, பிரமந்தனாறு பகுதிகளில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் டிப்பரில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 6 சாரதிகளும் தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் எனத் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## பேரணியில் பங்கேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு – கிழக்கில் கைதுசெய்யப்பட்ட முதலாவது நபர் இவராவார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தகவல் அறிந்த இளைஞரின் உறவினர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையம் முன்பாகத் திரண்டனர். இளைஞரின் தாயார், மகனின் விடுதலையைக் கோரி பொலிஸ் நிலையம் முன்பாக நீண்ட நேரம் கதறி அழுதார்.

பல மணி நேரம் குறித்த இளைஞரிடம் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்த பின்னர் விடுவித்தனர்.

## யாழ்.இந்தியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் ஈடுபட்டார்.

இந்தச் சந்திப்பின்போது இந்திய அரசால் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும், எதிர்காலத்தில் முன்னேற்றத்தை நோக்கிப் பயணிப்பதற்கு வேண்டிய வழிமுறைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

# விடுதலைப் புலிகளின் அரசியல் அஸ்திரமே தமிழ்க் கூட்டமைப்பு!

## சரத் வீரசேகர தெரிவிப்பு



விடுதலைப் புலிகளின் அரசியல் அஸ்திரமாக இன்னமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மேலும் பாரதிய ஜனதா கட்சியின் இலங்கை பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உருவாகலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் –

இந்திய பாரதிய ஜனதா கட்சி இலங்கையிலும் ஆதிக்கம் செய்யும் என அமைச்சர் அமித் ஷா கூறினார் என வெளிவரும் செய்திகளில் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் என எதுவும் இல்லை. நிகழ்வொன்றில் அவர் உணவு உட்கொண்ட வேளையில் அருகில் இருந்தவர்களுக்குக் கூறினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் எனது தனிப்பட்ட நிலைப்பாட்டை என்னால் கூற முடியும். பாரதிய ஜனதா கட்சியினால் நேரடியாக இலங்கையில் அரசியல் செய்ய முடியாது. அதற்கான அரசியல் அமைப்பு ரீதியிலான அனுமதியும் இல்லை. தேர்தல்கள் திணைக்களமும் அதற்கு அனுமதிக்க வாய்ப்புகள் இல்லை. எனவே, இது ஒரு கதையாக வேண்டுமானால் கூறலாம்.

ஆனால் அவர்களால் மறைமுக அரசியலில் ஈடுபட முடியும். அதற்கு அனுமதி இலங்கையில் உள்ளது.

எவ்வாறெனின், இலங்கையில் உள்ள அரசியல் காட்சிகளில் ஏதேனும் ஒரு கட்சியினூடாக இலங்கையில் அவர்களின் கொள்கையை பரப்பி அவர்களின் இலங்கை பிரதிநிதிகளாக இங்கு ஒரு கட்சி இயங்க முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்றொரு கட்சியை அவர்களின் பிரதிநிதிகளாக வைத்துக் கொள்ள முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை அவர்கள் இன்றுவரை இந்தியா மற்றும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளாக இலங்கையில் செயற்பட்டு வருகின்றனர்.

அவர்களுக்காக முழு நிதியும் மேற்கு நாடுகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் மூலமாகவும், புலிகளை ஆதரிக்கும் அமைப்புக்கள் மூலமாகவும் கிடைத்து வருகின்றன.

தேசியக் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால் கட்சியை உருவாக்கினாலும் வாக்களிக்க வேண்டிய கடமை மக்களிடம் உள்ளது. மக்கள் ஆதரிக்க வேண்டுமே. – என அவர் மேலும் தெரிவித்தார்.

# 2 ஆவது டோஸ் தடுப்பூசி புத்தாண்டுக்குப் பின்னரே!

கொழும்பு, செப்.19

இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா செனகா கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்ட இலங்கையர்களுக்கு அதன் இரண்டாவது டோஸ், தமிழ் – சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு தேவையான தடுப்பூசிகள் இலங்கைக்கு விரைவாக கிடைக்கும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த மாத இறுதிக்குள் கொவெக்ஸ் வசதியின் கீழ் உலக சுகாதார அமைப்பால் 2 லட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளதாக பதில் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

# 211 சுற்றுலாப் பயணிகள் கஜகஸ்தானிலிருந்து வருகை

கஜகஸ்தானில் இருந்து மேலும் 211 சுற்றுலாப் பயணிகள் நேற்று (வியாழக்கிழமை) நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 8.19 மணியளவில் ஸ்கெட் எயார் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் ஊடாக குறித்த சுற்றுலாப் பயணிகள் மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளனர்.

இதற்கு முன்னரும் கஜகஸ்தானில் இருந்து 235 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

கொரோனாத் தொற்றின் தாக்கத்தையடுத்து, இந்த வருடம் ஜனவரி 21 ஆம் திகதிக்கு பின்னராக இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 1,682 பேர் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளனர் என இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல்வாதிகள் அடங்கிய ஆணைக்குழுவின் நோக்கம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி?

நீதிமன்ற வழக்குகளை நடத்துவது தொடர்பாக முடிவுகளை எடுக்க அரசியல்வாதிகள் அடங்கிய ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளதா என பொதுமக்கள் சிந்திக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார இவ்வாறு கூறினார்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் குறித்து சபாநாயகரிடம் கேட்டபோது ஜனாதிபதி செயலகத்தில் இருந்து தனக்கு உத்தரவு கிடைக்கவில்லை எனத் தெரிவித்ததாகவும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

அத்தோடு இந்த விவகாரத்தை பரிசீலிக்க மூன்று பேர் கொண்ட ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அறிக்கையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை மேற்கோள்காட்டுவதாக குற்றம் சாட்டிய அவர் இந்த நடவடிக்கை எதிர்க்கட்சியை அடக்குவதற்கான அரசாங்கத்தின் முயற்சி என்றும் தெரிவித்தார்.

குற்றவாளிகளை விடுவிக்கவும், அப்பாவிகளை சிறையில் அடைக்கவும் அதிகாரிகள் முயற்சித்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றம் சாட்டினார்.

# முன்னேஸ்வர ஆலய வருடாந்த மாசி மக மகோற்சவம் ஆரம்பம்!

சிலாபம் – முன்னேஸ்வரம் ஸ்ரீ முன்னைநாதஸ் சுவாமி ஆலயத்தின் வருடாந்த மாசி மாத மகோற்சவம் நேற்று (வியாழக்கிழமை) கொடியேற்றதுடன் ஆரம்பமானது.

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான முன்னேஸ்வர ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமானது.

கொடிச்சீலைக்கு விசேட பூஜைகள் நடைபெற்று மங்கள வாத்தியங்கள் முழங்க கொடியேற்றம் இடம்பெற்றது. பின்னர் கொடிக்கம்பத்துக்கு அபிஷேகம் நடைபெற்றது.

ஆலய மகோற்சவ நிகழ்வில் சுகாதார வழிகாட்டுதல்களின் படி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# மட்டக்களப்பு நொச்சிமுனை கிராம உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யுமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நொச்சிமுனை கிழக்கு கிராம உத்தியோகத்தராக கடந்த 3 வருடங்களாகக் கடமையாற்றிவரும் கிராம உத்தியோகத்தரை உடன் இடமாற்றம் செய்யுமாறு கோரி அப்பகுதி பொதுமக்கள். ஒன்றிணைந்து நேற்று (வியாழக்கிழமை) கிராம உத்தியோகத்தர் அலுவலகத்துக்கு முன்னாள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த கிராம உத்தியோகத்தர் காரியாலயத்துக்கு முன்னாள் ஒன்றிணைந்த மக்கள் பொது மக்களை அவமதிக்கும் அதிகாரி வேண்டாம், அரச காணியைப் பணத்துக்கு விற்கும் கிராம உத்தியோகத்தர் வேண்டாம், பொதுமக்களுக்கு சேவை செய்யாத அதிகாரி எமக்குத் தேவையில்லை. அனைத்து கிராம உத்தியோகத்தர்களுக்கும் இடமாற்றம். ஆனால் இவருக்கு மட்டும் இடமாற்றம் இல்லையாம். பெண்களை மதிக்காத கிராம சேவகர் எமக்கு வேண்டாம், போன்ற வாசகங்கள் கொண்ட சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்த மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எ.சுதர்சன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மகஜர் ஒன்றை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்குமாறு பிரதேச செயலாளரிடம் கையளித்தமையைத் தொடர்ந்து ஆர்ப்பாடக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை, குறித்த கிராம உத்தியோகத்தருக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாகக் குறித்த கிராம சேவையாளரிடம் கேட்டபோது தன் தொடர்பான எந்த வித வீடியோ பதிவுகளையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும் ஆர்ப்பாட்டம் தொடர்பான எந்தவித கருத்துக்களையும் தெரிவிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# நோன்பின் மகத்துவம்

சிலுவை சுமந்து போகின்றது செம்மறி ஒன்று. அச் சிலுவைப் பாரத்தை மேலும் அழுத்த நாமும் காரணிகளா? எமது பாவச் செயல்கள் பல இன்றைய சமூகத்தில் சிலுவைகளாக சுமக்கும் பாவச் செயல்களை மீட்டுப்பார்த்து அதில் இருந்து மீள எழுவதே சிலுவைப் பயணத்தின் சிந்தனைகளாக்க தவப் பயணத்தைத் தொடர அழைக்கப்படுகிறோம்.

"கொடுமைத்தனத்தை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணைகளை அறுப்பதும், ஒடுக்கப்பட்டோர் விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்து கொள்ளும் நோன்பு" என நற்செய்தியால் அழைப்பு விடுக்கிறார் இயேசு.

எமது நோன்பின் வெளிப்பாடுகள் பிறரின் சிலுவைச் சுமைகளை குறைப்பதிலும் மனச் சுமைகளை குணப்படுத்தலுமே இறைவன் தேடும் நோன்பாக எம்மிடம் எதிர்பார்க்கிறார்.

சிலுவைப் பாதைப் பயணத்தை தொடரும்போது அதன் சுமைகளை களைவதற்காக இன்று நான் எடுக்கும் சபதம் என்ன? என் பாவத்தை பொறுத்தருளும் என எம்மையே நாம் மாறும் செயல்களாக அமைந்து சேர்ந்திருப்போரின் மனச் சுமைகளை களைவதும் நான் இணைந்து செயற்படும் அந்த சந்தர்ப்பங்களை தேடிச் சென்று செயற்படும் போது கூட எமது சிலுவை பாதையின் பயணங்கள் அர்த்தமூட்டும் என மனதில் இருத்தி புனித தவக்காலத்தை பயனுள்ளதாக மாற்றுவோம்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சுத்துமாத்து சித்து விளையாட்டு

**‘கணக்குப்பிள்ளை பேசக்கூடாது; கணக்குப் புத்தகம் பேச வேண்டும்’ என்பார்கள். ஆனால் இலங்கை அரசியலில் பெரும்பாலும் கணக்குப்பிள்ளைகள்தான் அதிகம் பேசுகின்றார்கள். கணக்குப் புத்தகங்களின் கணக்கோ வேறு மாதிரி இருக்கின்றது.**

**அத்தகைய கணக்குப்பிள்ளைப் பேச்சொன்றை – ‘கணக்கு விட்டு’ – பேசியிருக்கின்றார் அரசுத் தரப்பு முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி. திஸநாயக்கா.**

**கணக்கு வழக்குப் பார்த்து, கணக்குத் தீர்க்கப்படாமல் இருக்கும் ஒரு விடயத்தின் கணக்கை, கணக்குப் பார்க்காமலேயே –கணக்காய்வோ தணிக்கையோ செய்யாமலேயே – முடித்து விடுமாறு இந்தக் கணக்குப்பிள்ளை கூறுவது வேடிக்கையானது; விபரீதமானது.**

***“விடுதலை புலிகளுடனான மோதலில் ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக உலக நாடுகள் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, உண்மையான மனித உரிமைகள் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும்”* – என்கின்றார் அவர்.**

***“புலிகளின் நடவடிக்கைகள் காரணமாகவே பிரச்சினைகள் எழுந்தன. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட பாரிய உயிரிழப்புகளுக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு.***

***“மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்ட இராணுவம் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.”* – என்று விசனிக்கின்றார் எஸ்.பி. திஸநாயக்கா.**

**அரசின் இந்தக் ‘கணக்குப்பிள்ளை’ கூறும் கணக்கு சரியானதாக இருக்கட்டும்; ‘கணக்கு விடாத’ கணக்கு என்றே வைத்துக் கொள்வோம்.**

**அப்படியானால், அந்தக் கணக்கு வழக்கைக் கூட்டிக் கழித்துப் பார்த்துத் தணிக்கை செய்வதில் என்ன தப்பு இருக்க முடியும்?**

**மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்? மடியில் கனமில்லாவிட்டால், பயந்து பீதியடையத் தேவையில்லையே...!**

**அரசின் சார்பில் அதன் ‘கணக்குப் பிள்ளையான’ எஸ்.பி. திஸநாயக்கா கூறும் ‘கணக்கின்படி’ –**

**புலிகளின் நடவடிக்கைகள் காரணமாகவே பிரச்சினைகள் எழுந்தன என்பதும் –**

**யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் ஏற்பட்ட பாரிய உயிரிழப்புகளுக்கு புலிகளே – புலிகள் மட்டுமே – பொறுப்பு என்பதும் –**

**மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக மனிதாபிமான நடவடிக்கைகளை மட்டுமே அரசுப் படைகள் மேற்கொண்டன என்பதும் –**

**உண்மையானால், அது பற்றிய விடயங்களை விசாரிப்பதில் – விசாரணை செய்வதில் – என்ன பிழை வந்து விடும்?**

**யுத்த கால இறுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் என்ற கணக்கு வழக்கை தணிக்கை செய்வது – கணக்காய்வு செய்வது – என்றால், அது நீதி முறையான விசாரணையாக மட்டுமே இருக்க முடியும்.**

**எஸ்.பி. திஸநாயக்கா எம்.பி. கூறுவது போல யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட பாரிய உயிரிழப்புகளுக்கு புலிகளே – புலிகள் மட்டுமே – பொறுப்பு என்றால், அது பற்றிய நீதி முறையான விசாரணையை அவரது அரசு ஏற்க மறுப்பது ஏன்? அதற்கு முட்டுக்கட்டை போடுவது ஏன்?**

**களத்தில் நடந்தவற்றை நீதிமுறையான விதத்தில் விசாரிக்கப் போனால் உண்மைகள் அம்பலமாகிவிடும். அரசுப் பக்க கணக்குப் பிள்ளைகள் கூறிவரும் பொய்க் கணக்கு பகிரங்கமாகிவிடும். கணக்குப் பிள்ளைகளின் உண்மை முகங்கள் அம்பலமாகி, அவர்களின் குட்டு வெளிப்பட்டு, அவர்கள் மாட்டிக் கொண்டு விடுவர். அதனால்தான் உண்மையான கணக்கு வழக்குப் புத்தகப் பதிவுகளை – கணக்கு புத்தகங்களை – மூடி மறைத்துவிட்டு, கணக்குப் பிள்ளைகளான, ஆளும் தரப்பு அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் ‘கணக்கு விட்டு’ பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.**

**யுத்த கால நிகழ்வுகள் என்ற கணக்கு வழக்கை அவிழ்த்துக் கொட்டி விசாரித்தால் –**

**யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் என்று உள்ளே ஆழமாகப் புதைந்து, மூடி மறைக்கப்பட்டிருக்கும் பல கணக்கு வழக்கு மோசடிகள் வெளியே வரும்.**

**இந்த யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் என்ற விவகாரங்களை ஒட்டிய கணக்கு வழக்குகளை சரியான நீதி விசாரணை முறைமை மூலம் தணிக்கை செய்து – கணக்காய்வு பண்ணி – பரிசீலித்தால், மனித உரிமைகள், யுத்த நடைமுறைகள், மனித மாண்புகளைப் பேணுகின்றமை தொடர்பான இலங்கை அரசின் ஒட்டுமொத்தக் கணக்குப் புத்தகமே வெறும் சுத்துமாத்துச் சித்து விளையாட்டுத்தான் என்பது அம்பலமாகிவிடும்.**

**அதனால்தான், கணக்குப் புத்தகத்தை மறைத்துவிட்டு கணக்குப் பிள்ளைகள் வாய்ப்பந்தல் போட்டு சமாளிக்க முயல்கின்றார்கள்.**

## இலங்கையில் பா.ஜ.க. ஆட்சி:
# உண்மைப் பிரச்சினையில் இருந்து மக்களை திசை திருப்பும் முயற்சி

### மனோ கணேசன் காட்டம்



பெரிய தேசபக்தர்களை போன்று திரிபுரா பா.ஜ.க. முதலமைச்சரின் தலையை இங்கே சிலர் உருட்டுகிறார்கள் என முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ள அவர் -

இந்தியாவின் வடக்குக் கிழக்கு மாநிலம் திரிபுராவின் பா.ஜ.க. முதல்வர் நேபாளத்திலும் இலங்கையிலும் பா.ஜ.க. கிளைகள் உருவாக்குவோம் என்ற மாதிரி சொன்னாராம் என இங்கே சிலர் சும்மா போட்டு குழப்பிக் கொள்கிறார்கள்.

நம் நாட்டின் உண்மை பிரச்சினைகளால் மக்கள் துவண்டு போய் இருக்கின்றமையைத் திசை திருப்ப இது இன்று பயன்படுகிறது.

சாதாரண பாமரருக்கும் தெரிந்த விடயம் பற்றி, அரசியல் சட்ட விற்பன்னர்கள் ஏதோ பெரிய அரசியல் சட்ட வியாக்கியானம் வேறு கொடுக்கின்றார்கள். இவை என்ன என எங்களுக்குத் தெரியாதா?

இந்தியப் பிரதமர் மோடியின் தலைமையில் இந்நாட்டில் கட்சி அமைக்க முடியாது. இந்திய பீஜேபியின் நேரடி கிளையை இங்கே அமைக்க சட்டத்தில் இடமில்லை.

ஆனால் இங்கே ஒரு கட்சியை வேண்டுமானால், சட்டப்படி ‘பாரதீய ஜனதா கட்சி’ (பீஜேபி) என பதிவு செய்ய விண்ணப்பிக்கலாம். அல்லது உள்ள ஒரு கட்சியின் பெயரைக்கூட பீஜேபி என மாற்றிக்கொள்ளலாம்.

இதற்கு சட்டம், கட்டுப் போட முடியுமா என்ன....? இங்கே ஹெல உறுமய, ருஹுனு ஜனதா, தமிழ் முற்போக்கு, தமிழ் தேசிய, முஸ்லிம் காங்கிரஸ் என பல கட்சிகள் உள்ளன. இவை போன்று அதுவும் அமையலாம்.

உலகம் முழுக்க இலங்கை, இந்தியா உள்ளிட்ட பல ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் சோசலிஸ்ட்... என்ற பெயரில் கட்சிகள் இல்லையா?

பல நாடுகளில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி.... என்றும் கிரீன் பார்ட்டி.... என்றும் கட்சிகள் இருக்கின்றன. அதேபோல் இஸ்லாமிய... என்ற பெயர் கொண்ட கட்சிகளும் உள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பிறகு பேராயர் ரஞ்சித் மெல்கம், ‘இலங்கை கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி’ என்று ஒரு கட்சி அமைக்க போகின்றாரோ என்ற கதை அடிபட்டது. அந்தளவுக்கு அவரது உரைகளில் அரசியல் இருந்தது.

இன்னமும் சில கட்சிகள் பெயரளவில் ஓர் அடிப்படையில் இல்லாவிட்டாலும்கூட கொள்கை அடிப்படையில் உலகமயப்பட்ட ஒருமைபாடுகளைக் கொண்டுள்ளன.

நம்ம ஜே.வி.பி., பல உலக புரட்சி இயக்கங்களுடன் ஒருமைப்பாடு கொண்டிருந்தது. இப்போதுகூட அவர்களது மாநாடுகளுக்கு வேறு நாடுகளின் பல கட்சி பிரதிநிதிகள் வருகிறார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, சுதந்திர கட்சி மாநாடுகளுக்கு சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகள் வருகின்றார்கள். நம்ம ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிகழ்வுகளில் இந்திய முஸ்லிம் லீக் பிரதிநிதிகளைக் கண்டுள்ளேன். ஆக, இதெல்லாம் பெரிய டீல் அல்ல. சின்ன சின்ன அரசியல் டீல்கள்தான்...!

பிப்லப் டெப், ஒரு துடிப்பான இளம் பிஜேபி அரசியலர். எதிர்கால இந்தியாவின் ஒரு முன்னணி தலைவராக வரக்கூடியவர். இன்று கொஞ்சம் அதிகமாக பேசி விட்டார். அவ்வளவுதான். இப்போது அவரை அழைத்து பிரதமர் மோடி விளக்கம் கேட்டுள்ளார்.

இதைப் பிடித்துக்கொண்டு இங்கே சிலர் பெரிய யோக்கியர்கள், உலக மகா உத்தமர்கள் போன்று பெரிய கட்டு கட்டுகிறார்கள். இவர்களை பற்றி எனக்குத் தெரியாதா ?

போர்த்துகீசர், ஒல்லாந்தரால் கைப்பற்ற முடியாமல்போன கண்டி இராச்சியத்தை, ஆங்கிலேயர் எப்படி கைப்பற்றினார்கள்?

கண்டியின் கடைசி வீர தமிழ் மன்னன் கண்ணுசாமி நாயக்கர் என்ற ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனை காட்டிக்கொடுத்து, போட்டுக் கொடுத்து தேசத்துரோகம் செய்த பிலிமத்தலாவை, எகலபொல நிலமே ஆகியோர் யார் என்பதை தேடி பார்த்தாலே விடை கிடைக்கும்.

மேடையில் ஏறி தேசப்பற்றும் தமிழ், முஸ்லிம் இலங்கையருக்கு எதிராக இனவாதமும் பேசிவிட்டு கீழே இறங்கி வந்து இரகசியமாக சீனாவுக்கோ வெளிநாடுகளுக்கோ நாட்டை விற்று பிழைப்பு நடத்தும் பிலிமத்தலாவை, எகலபொல போன்ற நபர்கள் இந்நாட்டில் இன்றும் இருக்கிறார்கள்.

இதை மனதில் கொண்டு நாம் இலங்கையர்களாக உள்நாட்டில் ஒற்றுமையாக இருந்தால், எவரும் எம்மை ஆக்கிரமிக்க முடியாது. இல்லாவிட்டால் அதோ கதிதான் என்பதை உணர்வோம். - எனப் பதிவிட்டுள்ளார்.

## ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வுக்கு உதவிய மதரஸா பாடசாலையின் அதிபர் கைது!

கொழும்பு, ஜன. 19

சர்ச்சைக்குரிய மதரஸா பாடசாலையின் அதிபர் முகமது ஷாகீல் என்பவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை பொருத்தமான நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சட்டமா அதிபர் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார் என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளரும் சட்டத்தரணியுமான நிஷாரா ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்காகக் கைது செய்யப்பட்டு சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சட்டத் தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வுக்கு பயங் கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் உதவி அளித்த குற்றச்சாட்டிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ஈஸ்டர் தாக்குதலின்போது 6, 000 வாள்கள் இறக்குமதி: பேராயரின் மனுவை விசாரிக்க நீதிமன்றம் தீர்மானம்

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்ற காலப்பகுதியில் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டன எனக் கூறப்படும் 6 ஆயிரம் வாள்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரி, கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேராயரின் ரிட் மனுவை எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று தீர்மானித்துள்ளது.

இதேநேரம், சம்பவம் குறித்து இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் விளக்கமளிக்க பொலிஸ்மா அதிபர் உட்பட மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள பாதுகாப்பு பிரிவின் பிரதானிகளுக்கும் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

மேன்முறையீட்டுநீதிமன்றத்தின்தலைமை நீதியரசர் அர்ஜுன ஒபேசேகர மற்றும் நீதியரசர் மாயாதுன்னே கொராயா ஆகியோரை உள்ளடக்கிய மேன்முறையீட்டு நீதியரசர்கள் குழாம் இவ்வாறு அழைப்பாணை விடுத்துள்ளது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம் பெற்ற காலப்பகுதியில் சிலரால் நாட்டுக்கு 6 ஆயிரம் வாள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்கள் காணப்படுவதாக, பேராயர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

**பகுதி (II) B**


**ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

07.a) கூட்டல் விருத்தியொன்றின் முதலாம் உறுப்பு 5 ஆகவும், ஒன்பதாம் உறுப்பு 29 ஆகவும் அமைந்துள்ளது.
i) கூட்டல் விருத்தியின் பொது வித்தியாசம் யாது?
ii) 125 என்பது இவ் விருத்தியின் எத்தனையாம் உறுப்பாக அமையும்.
iii)முதல் 18 உறுப்புக்களின் கூட்டுத்தொகை 550 இலும் குறைவாகும் எனக் காட்டுக.

b) பெருக்கல் விருத்தியின் முதலாம் உறுப்பு 2 ஆகும்.
2 ஆம் உறுப்புகளின் கூட்டுத்தொகை 84 ஆகவும் பொது விகிதம் நேர் பெறுமானமாகவும் உள்ளது ஆயின் 5 ஆம் உறுப்பு 2592 எனக் காட்டுக.


08.பின்வரும் அமைப்புகளுக்கு ஒரு cm/mm அளவிடை உள்ள ஒரு நேர்விளிம்பையும் ஒரு கவராயத்தையும் மாத்திரம் பயன்படுத்துக. அமைப்புக் கோடுகளை தெளிவாகக் காட்டுக.
i) AB=6cm ஆகும். நேர்கோட்டை வரைக.
ii) AB இற்கு 4cm தூரத்தில் அமையுமாறு சமாந்தரக் கோட்டை அமைக்க.
iii) $B\hat{A}C = 60^o$ ஆகுமாறு புள்ளி C யினை மேலுள்ள சமாந்தர நேர்கோட்டில் காட்டி முக்கோணி ABC யை அமைக்க.
iv) மையம் O மேலுள்ள சமாந்தர கோட்டில் அமையுமாறு புள்ளிகள் B,C யினூடு செல்லுமாறு வட்டம் ஒன்றை அமைக்குக.
v) OB யின் நீளத்தை அளந்து எழுதுக.

09.உருவில் AB எனும் நிலைக் குத்துக் கம்பம் கிடைத் தரைக்கு செங்குத்தாக நிறுத்தப்பட்டுள்ளது.





நிலைக்குத்துக் கம்பம் AB யிலிருந்து 50m தூரத்தில் புள்ளி C உள்ளது. புள்ளி D யிலிருந்து B யிற்கான கம்பியின் நீளம் 30m ஆகும். D யிலிருந்து B இற்கான ஏற்றக் கோணம் $40^o$ ஆகுமெனின் C யிலிருந்து B யிற்கான ஏற்றக் கோணம் யாது? (உருவை பிரதி செய்து தரவுகளை குறிக்குக.)

10.O இனை மையமாகவும் AB ஐ விட்டமாகவும் கொண்ட வட்டத்தில் நாண் CD யானது வட்ட ஆரைக்கு சமனாக இருப்பதோடு AC, BD என்பன E இல் இடைவெட்டுகின்றன. எனின் $A\hat{E}B = 60^o$ எனக் காட்டுக




11.முக்கோணி ABC யில் AB, AC எனும் பக்கங்களின் நடுப்புள்ளிகள் முறையே P,Q ஆகும். நீட்டப்பட்ட PQஆனது C இலிருந்து ABக்கு சமாந்தரமாக வரையப்பட்ட நேர் கோட்டை R இல் சந்திக்கிறது. $A\hat{B}C = A\hat{C}R$ ஆகும். எனவே APCR ஒரு செவ்வகம் எனக் காட்டுக.

12.பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டியொன்றில் கலந்து கொண்ட 120 மாணவர்கள் பங்குபற்றிய விளையாட்டு நிகழ்ச்சிகள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது. அத்துடன் முழுமைப்படுத்தப்படாத வென் வரிப்படமும் தரப்பட்டுள்ளது.




8 பேர் மூன்று வகையான நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றினர்.
65 பேர் சுவட்டு நிகழ்ச்சிகளிலும், 45 பேர் மைதான நிகழ்ச்சிகளிலும், 42 பேர் குழு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றினர்.
20 பேர் சுவட்டு நிகழ்ச்சிகளிலும் மைதான நிகழ்ச்சிகளிலும், 25 பேர் சுவட்டு நிகழ்ச்சிகளிலும் குழு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றினர்.
15 பேர் மைதான நிகழ்ச்சிகளிலும் குழு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றினர்.

i) தரப்பட்டுள்ள வென்வரிப்படத்தை உமது விடைத்தாளில் பிரதி செய்து மேற்குறித்த தகவல்களை அதிற்சேர்க்க
ii) சுவட்டு நிகழ்ச்சிகளில் மாத்திரம் பங்கு பற்றிய மாணவர் எண்ணிக்கையைக் காண்க.
iii) யாதாயினும் ஒரு வகையான நிகழ்ச்சியில் மாத்திரம் பங்குபற்றிய மாணவர் எண்ணிக்கையைக் காண்க.
iv) எந்தவொரு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றாத மாணவர் எண்ணிக்கையைக் காண்க.
v) தெரிவு செய்யப்படும் மாணவன் ஒருவன் மைதான நிகழ்வில் பங்குபற்றாமைக்கான நிகழ்தகவு யாது?

5

# இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி ஏன் இங்கு செயற்பட முடியாது?

## இந்து சமயப் பேரவைத் தலைவர் சக்திகிரீவன் கேள்வி



இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி இலங்கை அரசமைப்பு விதிகள் மற்றும் சட்டங்களுக்கு அமைவாக ஏன் இங்கு செயற்பட முடியாது. - இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார் இந்து சமயப் பேரவைத் தலைவர் சக்திகிரீவன்.

இது தொடர்பாக அவர் நேற்று அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையில் பாரதிய ஜனதா கட்சி அமைய உள்ளமை தொடர்பாக பல்வேறு ஊடகங்களிலும் பல்வேறுதரப்பினரும் தத்தமது ஆற்றலுக்கேற்ப கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக உண்மைத்தன்மையை வெளியிடவேண்டிய கடப்பாடு, இவ்விடயம் இந்து சமயத்துடன் தொடர்புபடுவதால், இந்து சமயப்பேரவையின் பொறுப்புவாய்ந்த தலைவர் என்ற வகையில் எம்மைச் சார்ந்ததென்பதை யான் நன்குணர்வேன்.

இந்திய பாரதிய ஜனதாக் கட்சி இங்கு செயற்படவிடமுடியாது என்கிறார்கள் சிலர். வேறு சிலர் நாடு குழம்பும் என்கிறார்கள். இப்படி பலவற்றையும்கூறுகிறார்கள். சிலர் இதற்கு எதிராக வீதிக்கு இறங்கிப் படுத்துறங்கும் போராட்டமும் நடாத்துகிறார்கள். இந்நிலையில் அவர்கள் கூறுவது போல இந்தியத் திருநாட்டிலுள்ள பா.ஜ.கவை இங்கு அமைக்க முடியாதென்றே யானும் கருதுகின்றேன். ஆனால், இங்கு அமையப் போவது இலங்கை அரசமைப்புச் சட்டத்திற்கு அமைவான இலங்கை பா.ஜ.கவே.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இங்கு 'கம்யூனிஸ்ட் – பீகிங் பிரிவு' என்றும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி இங்கு 'கம்யூனிஸ்ட் – சோவியத் பிரிவு' என்றும் இயங்குவது போன்றதுதான் இதுவும்.

இது ஒருபுறமிருக்க பா.ஜ.க. மதவெறி பிடித்த கட்சி என்றும் சொல்கிறார்கள். உண்மையில் பா.ஜ.க. தர்மத்தை நிலைநாட்டவே பாடுபடுகிறது. இங்கு அமையும் பா.ஜ.கவும் அப்படித்தான் செயற்படுமென்று நம்புகின்றேன். இந்தக் கட்சியை அமைக்கப் போவதாகத் தெரிவித்து பிரபல தொழிலதிபர் திரு. வி. முத்துசாமி என்னைச் சந்தித்துக் கூறி ஆசிவழங்குமாறு கேட்டுக்கொண்டார். அதனை ஏற்று அவர்களின் பணி சிறந்தோங்கவேண்டுமென ஆசி வழங்கினேன். இந்தக் கட்சி இந்து மதம் சார்ந்ததென்று சிலர் கூறுகின்றனர். இந்தக்கட்சியை அப்படி அமையாது என்று அன்பர் முத்துசாமி என்னிடம் உறுதி கூறியுள்ளார்.

ஆகையால் எந்த இனத்தவரும் எந்த மதத்தவரும் பயப்படத் தேவையில்லை. தாம்நத்தை நம்பும் எவரும் இந்தக் கட்சியில் இணைந்து பயணிக்க முடியும். டான் ரீவியில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில், இங்கு உள்ள இந்துத்துவவாதிகள் புதிய பிரச்சினைகளைத் தொடக்கி இங்கு இந்தியாவின் ஆதிக்கத்தைக் கூட்டப் பார்க்கிறார்கள் என்கிறார்கள் சில விரிவுரையாளர்கள். இவர்களின் விவேகத்தை என்ன சொல்லி வாழ்த்துவது! இவர்கள் எல்லாமறிந்த ஞானிகள் போலப் பேசிப் பார்க்கிறார்கள்.

இந்தியா ஒரு பெரிய தேசம். அப்படியிருக்க இந்தப் பொட்டளவு இலங்கையில் ஏன்இந்தியா ஆதிக்கம் செலுத்த வேண்டும்? இதனை ஏன் நம்மவர்கள் சிந்திக்கிறார்கள் இல்லை. எங்கள் மக்கள் நல்லவற்றைச் சிந்திக்கப் பழகுவது அவசியமாகிறது. – என்று உள்ளது.

# 13 மரணங்கள் கொழும்புக்கு வெளியே பதிவாகியுள்ளன!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொரோனாத் தொற்றால் கடந்த புதன்கிழமை பதிவாகிய அதிக எண்ணிக்கையிலான இறப்புக்கள், குறிப்பாக வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவை என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அச்சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே, நாட்டின் மொத்த கொரோனா மரணங்களில் 60 - 65 வீதம் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் பதிவாகியதாக குறிப்பிட்டார்.

இருப்பினும் கடந்த புதன்கிழமை பதிவாகிய 13 இறப்புகளும் வெளிப் பகுதிகளில் பதிவாகியதாகவும் வைத்தியர் ஹரித அலுத்கே கூறினார்.

ஆகவே, வைரஸ் தொடர்பான அதிக இறப்புகளைத் தவிர்ப்பதற்காக, கடுமையான திட்டத்தைசுகாதார அமைச்சு செயற்படுத்த வேண்டும் என அரச மருத் துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே குறிப்பிட்டார்.

# பல்கலை மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு!

பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 500 இனால் அதிகரிக்கப்படவுள்ளது.

இதற்காக பல்கலைக்கழக கட்டமைப்பில் புதிதாக 500 விரிவுரையாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இந்தவிடயத்தைத்தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

பல்கலைக்கழகங்களுக்கு இந்த வருடம் இணைத்துக்கொள்ளப்படவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 579 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 40 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளார்கள். இதற்காக உப வேந்தர்கள் மற்றும் திறைசேரியின்பங்களிப்புக்கிடைத்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு அடுத்த மாதத்திற்கு முன்னதாக கொரோனாத்தடுப்பூசியை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக முதற்கட்டத்தின் கீழ் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ள மருத்துவ பீட மாணவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.



“ஐந்து ஆயிரம் ரூபாவிற்காக வழக்காடி ஐந்து லட்சம் ரூபாவை செலவழித்தமை, 2 சிலிண்டருக்காக 3 வருடங்கள் வழக்காடியமை, களவு கொடுத்த பொருள் பொலிஸாரால் மீட்டும் உரியவரின் கரம் கிட்டாமை இவையும் ‘தாமதித்த நீதியும் மறுக்கப்பட்ட நீதியாகுமா?’ என்ற வகைக்குள் அடங்கும் என்கின்றனர் சட்டவல்லுநர்கள்.”

ந.லோகதயாளன்

# நீதியின் திருக்கூத்து!

நாட்டின் நிர்வாக இயந்திரத்தில் மக்கள் உச்ச பட்சமாகவும் இறுதியான நம்பிக்கை இடமாகவும் கொண்டிருப்பது நீதித்துறையைத்தான். நீதித் துறையில் மக்களுடன் நேரடித் தொடர்புபட்ட நிர்வாக அலகாக இருப்பது நீதிமன்றங்களாகும். நீதியைப் பெறுவதற்கு – நியாயத்தை நிலைநாட்டுவதற்கு – அந்த நீதிமன்றங்களை நாட வேண்டும் என்ற ஆர்வமே மக்களிடம் அதிகரிக்க வேண்டுமே அன்றி’ பிச்சை வேண்டாம் நாயை பிடி’ என ஓட நினைக்கும் அளவிற்கு அவ்விவகாரம் இருக்க கூடாது.

இலங்கையில் 5 படிமுறை நீதிமன்றங்கள் உள்ளன. நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மாகாண நீதிமன்றம்/ மேல் நீதிமன்றம் என்பன அனைத்து மாகாணங்களிற்குள் உள்ளன. இவற்றுக்கு மேல் உள்ள இரு படிமுறைகளான மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் என்பன கொழும்பில் உள்ளன. இங்கே நீதித் துறையில் ‘காலம் தாழ்த்தும் நீதியும் மறுக்கப்படும் நீதிக்குச் சமன்’ எனக் கூறப்படும் வாசகம் தொடர்பில் வடக்கு மாகாண நீதிமன்றங்களில் இடம்பெற்ற உண்மைச் சம்பவங்களின் தொகுப்பே முன்வைக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண நகரத்தின் மத்தியில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மர விற்பனை நிலையத்தில் சிட்டையிடப்பட்ட மரங்கள் சிலவற்றை ஓர் பார ஊர்தியில் ஒருவர் வாகனக் கூலிக்கு ஊர்காவற்றுறை நோக்கி எடுத்துச் சென்றுள்ளார். இதன்போது வீதிச் சோதனையில் இருந்த பொலிஸார் அதனை மறித்து சோதனை செய்தபோது ஒரு வகை மரம் அனுமதி அற்றது எனத் தெரிவித்துள்ளனர். இதன்போது வாகன உரிமையாளர் கொள்வனவு செய்த சிட்டையை காண்பித்துள்ளார். இருப்பினும் அதனை ஏற்க மறுத்த பொலிஸார் வழக்குப் பதிவு செய்யப் போவதாகவும் அல்லது 5 ஆயிரம் ரூபா வழங்குமாறும் கோரியுள்ளனர். ( பொலிஸார் கூறியதை ஆதாரப்படுத்தும் சான்று கிட்டவில்லை.) அதனை வழங்க மறுத்த சாரதி வழக்குப் பதிவு செய்யுமாறு கூறியுள்ளார். அதன் பிரகாரம் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

எதிராளி தான் சுத்தவாளி என நீதிமன்றில் கூறியதன் அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டார். பின்பு 29 நாள்களின் பின் பார ஊர்தியும் ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டு 306/2017 இலக்கத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு இடம்பெற்றது. இந்த வழக்கு 2019 இல் முடிவுற்றது எதிராளி சுத்தவாளி என விடுவிக்கப்பட்டார். அதாவது 28 மாதங்கள் வழக்கு இடம்பெற்றது. இதற்கு இடையில் 19 வழக்குத் தவணைகள். 19 தவணைகளுக்கும் சட்டத்தரணி உட்பட்ட செலவு தலா 5 ஆயிரம் ரூபா. அதன் பின்பே மரங்கள் விடுவிக்கப்பட்டன. மரம் கொள்வனவு விலை 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக இருந்தபோதும் வழக்கு முடிந்த பின்பு கையளித்தவை அனைத்தும் விறகு விலைக்கு 30 ஆயிரம் ரூபாவிற்கும் விற்கமுடியாத சூழலில் அயலில் உள்ள ஆலயத்திற்கு இலவசமாக வழங்கப்பட்டன.

வழக்குச் செலவு ஒரு லட்சம் ரூபா, பார ஊர்தி 29 நாள் தடுத்து வைப்பு, தொழில் இல்லை, 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா மரம் இல்லை, 20 நாள்கள் நீதிமன்றிற்கும், 20 நாள் சட்டத்தரணிக்குமாக 40 நாள்கள் தொழில் இன்றி அலைச்சல். இதனைவிட பொலிஸ் கேட்ட 5 ஆயிரம் ரூபாவை வழங்கியிருக்கலாமோ என்கின்றார் பாதிக்கப்பட்டவர்.

இது ஒரு புறமிருக்க, 2017இல் பலாலி வீதியில் ஒரு சில்லறை கடையில் கணவன் நகரிற்கு பொருள் கொள்வனவிற்கு சென்ற சமயம் மனைவி கடையில் வியாபாரத்தைக் கவனித்து இருக்கின்றார். அச்சமயம் இருவர் முச்சக்கர வண்டியில் வந்து ஒருவர் பொருள்களை வேண்டுவது போன்று பொருளைக் கோர கடையில் நின்ற பெண் பொருளை எடுப்பதற்காக கடையின் உள்ளே சென்றிருக்கின்றார். அச்சமயம் பொருள் கொள்வனவுக்கு வந்தவர்கள் கடையின் வெளியே பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த எரிவாயு சிலிண்டர் இரண்டை முச்சக்கர வண்டியில் ஏற்றிக்கொண்டு தப்பியோட முயன்ற சமயம் கடையில் நின்ற பெண் குரல் எழுப்பியிருக்கின்றார். அத்தோடு சிலிண்டர்களைத் தூக்கிச் சென்றவர்களில் ஒருவரை சேட்டில் எட்டிப்பிடித்தும் விட்டார். இதனையடுத்து அயல்கடைகாரர்களின் உதவியுடன் தப்பிச் சென்ற ஓட்டோ பிடிக்கப்பட்டு எரிவாயு சிலிண்டர்களும் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் மறுநாள் பத்திரிகைகளில் வந்த பின்னர் அந்தக் கடைக்குச் சென்ற பொலிஸார் பத்திரிகையிலும் சம்பவ விவரம் வந்தமையினால் வழக்குப் பதிவு செய்ய வேண்டும், சம்பந்தப்பட்ட சிலிண்டர்கள் இரண்டையும் நீதிமன்றின் மூலம் பெறலாம், ஆகவே சான்றுப் பொருள்களாக அவற்றை ஒப்படையுங்கள் என்றனர். கடைக்காரரும் வழங்கினார். அதன் பிரகாரம் வழக்கும் பதிவு செய்யப்பட்டது. வழக்கு முதலில் 9 மாதங்கள் இழுபட்டது. இதன்போது சான்றுப் பொருள்கள் நீதிமன்றில் இருந்து உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கடைக்காரர் வெற்று சிலிண்டரை முகவரிடம் கையளித்து புதிய சிலிண்டரை கொள்வனவு செய்தும் விற்பனையிலும் ஈடுபட்டு விட்டார். இனி வழக்கிற்கு நீங்கள் வரத் தேவையில்லை என நீதிபதி வேறு கூறியிருந்தார்.

சில மாதங்கள் கடந்தன. நீதிபதி இடமாற்றத்தில் சென்றார். புதிய நீதிபதி வந்தபோது கடை உரிமையாளர் மீள அழைக்கப்பட்டமையோடு சான்றுப் பொருள்களும் கோரப்பட்டன. இதன்போது கடைக்காரரிடம் வேறு இரு எரிவாயு சிலிண்டர்கள் பெறப்பட்டு, இதே வழக்கு இலக்கம் எழுதப்பட்டு, நீதிமன்றில் பொலிஸாரால் காட்டப்பட்டது. வழக்கு மேலும் சில மாதம் இடம்பெற்றது. எரிவாயு சிலிண்டர் இரண்டாவது தடவையாகவும் கடை உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதுவும் முகவர் நிலையத்திற்கு வழங்கப்பட்டு,புதிய எரிவாயு சிலிண்டர்கள் கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டும் விட்டன. தீர்ப்பிற்கு திகதியிடப்பட்ட சமயம் 3 ஆவது தடவையாக எரிவாயு சிலிண்டர் கோரப்பட்டபோது கடை உரிமையாளர் விழி பிதுங்கி நின்றார். 2ஆவது தடவை போன்று இரு புதிய சிலிண்டரைக் கொண்டு வாருங்கள் எனக் கூறப்பட கடை உரிமையாளரும் இரு சிலிண்டர்களை ஒப்படைக்க, அவை அவசர அவசரமாக வழக்கு இலக்கம் எழுதப்பட்டு நீதிமன்றில் சான்றுப் பொருளாக சமர்ப்பிக்கப்பட்டன.

உண்மையில் எதிராளியின் சட்டத்தரணி மிகத் திறமையானவராக இருந்திருப்பின் 2017ஆம் ஆண்டு களவாடப்பட்டவையாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது, எனினும் 2019ஆம் ஆண்டு வர்ணம் பூசி திகதியிடப்பட்ட எரிவாயு சிலிண்டரே இறுதியாக மன்றிற்கு சான்றுப் பொருளாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை அவதானித்து இருப்பார். அதனை சட்டத்தரணி கவனித்திருந்தால் – அதனை மன்றில் சுட்டிக் காட்டியிருந்தால் – வழக்கே தலைகீழாக மாறியிருக்கும். நல்லவேளை அவ்வாறு இடம்பெறவில்லை. இதேநேரம் 3 ஆண்டுகளாக அலைந்த கடை உரிமையாளரோ இதைவிட இரண்டு எரிவாயு சிலிண்டர்களையும் கள்ளனே கொண்டு போக விட்டிருக்கலாம் என்ற நிலைமைக்குச் சென்று விட்டார்.

இவை அனைத்திற்கும் மேலாக ‘கொடுமை கொடுமை எனக் கோயிலிற்கு போனால் அங்கே இரண்டு கொடுமை தலையை விரித்து ஆடிச்சாம்’ என்ற ஒரு கதையுள்ளது.

2017 இல் வவுனியாப் பகுதியில் ஒரு களவு இடம்பெற்றது. இதில் 23 பவுண் நகை, 3 லட்சம் ரூபா பணம் என்பன களவாடப்பட்டது. இதில் நாலரைப் பவுண் நகையையும் ஒரு லட்சம் ரூபா பணத்தையும் மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் அறிவித்தனர். பொலிஸார் அவற்றை நீதிமன்றில் சான்றுப் பொருளாகவும் கையளித்தனர். பொலிஸார் கையளித்து 2 ஆண்டுகளாகியும் இன்றுவரை உரிமையாளரிடம் அவை மீளக் கையளிக்கப்படவில்லை. களவு கொடுத்தவர் விசனம் அடைந்து வினாவியபோது கிடைத்த தகவல் தலையில் இடிவிழுந்தமை போன்று அமைந்து விட்டது.

அதாவது பொலிஸாரால் கையளிக்கப்பட்ட சான்றுப் பொருள் நீதிமன்றப் பாதுகாப்பில் இருந்த சமயம் நீதிமன்றில் களவாடப்பட்டு விட்டது. இதனையே ‘கொடுமை, கொடுமை என்று கோயிலிற்கு போனால் அங்கு இரண்டு கொடுமை தலை விரித்தாடிச்சாம்’ என்றோம்.

தற்போது நீதிமன்றில் சான்றுப் பொருள் களவு போன விடயம் சீ.ஐ.டியில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. களவு கொடுத்தவர் 20 தவணைக்கு அலைந்தது தான் மிச்சம்.

இப்படி பட்டியலிட்டால் அண்மைக்கால வழக்குகளே இங்கு பல நூறு தாண்டும்.

இதற்கெல்லாம் காரணம், நீதிமன்றங்களோ, நீதிபதிகளோ, சட்டத்தரணிகளோ, பொலிஸாரோ அல்லர். நமது நீதித் துறைதான், நமது நீதிமுறைமைதான்...!

# இந்தியாவுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளது அரசாங்கம்!

தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாக, இந்தியாவுடனான நல்லுறவு சிதைவடைந்துவிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், இந்தியா, பாகிஸ்தான் போன்ற பிராந்திய நட்பு நாடுகளுடன் இலங்கை தொடர்ந்து நல்லுறவுடன் பணியாற்ற வேண்டும் என வலியுறுத்தினார்.

தற்போதைய அரசாங்கம் இந்தியாவுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்றும் இது எதிர்காலத்தில் இலங்கையை மோசமாகப் பாதிக்கக்கூடும் என்றும் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாரதீய ஜனதா கட்சி இலங்கையில்தனது அரசியல்நடவடிக்கைகளை விரிவுபடுத்தவுள்ளதாக வெளியான செய்திகள்தொடர்பாகக்கருத்துத்தெரிவித்த அவர், அரசியல் நோக்கத்திற்காக வெளியான அறிக்கை எனக் கூறினார்.



# ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளருக்கு இலங்கை ஜனநாயக தன்மை புரியவேண்டும்!

## கம்மன்பில எடுத்துரைப்பு



கொழும்பு, ஜன. 19

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளருக்கு இலங்கையின் ஜனநாயக தன்மை புரிய வேண்டும் என அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது உதய கம்மன்பில மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

இம்முறை அதிகாரம் தனிக் கட்சியொன்றுக்கு மாத்திரம் கிடைக்கவில்லை. 15 கட்சிகள் ஒன்றிணைந்த கூட்டணிக்கே அதிகாரம் கிடைத்துள்ளது.

நாம் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் இருக்கின்றோம் என்றால், கட்சிகளைக் கைவிட்டு யாருமே பொது ஜன பெரமுன உறுப்பினராக இல்லாமலிருந்திருக்க முடியும்.

எனினும் எம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு நிலைப்பாடுகள் உள்ளமையின் காரணமாகவே வெவ்வேறு கட்சிகளாக கூட்டணியமைத்துள்ளோம். வெவ்வேறு நிலைப்பாடுகளில் இணக்கம் காணக்கூடிய விடயங்களே சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் சுபீட்சத்தின் நோக்கிற்கு அனைவரும் இணங்குகின்றோம். அதற்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது. எனினும் அதன் வெளிப்புறத் தன்மை தொடர்பில் தொடர்ச்சியாக எமக்கிடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

பத்து லட்சம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கூட்டணியில் தினமும் முரண்பாடுகள் ஏற்பட்டாலும் அது புதுமைப்பட வேண்டிய காரணியல்ல.

குறித்த முரண்பாடுகள் பரந்தளவில் விவாதத்துக்கு உட்படும்போது அரசாங்கத்திற்குள் ஜனநாயகம் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன்.

எனவே இவை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கும் புரிய வேண்டும்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையின் முதலாவது திண்மக் கழிவுகள் மின் உற்பத்தி நிலையம் பிரதமரால் திறப்பு!



கெரவலபிட்டியவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது திண்மக் கழிவு மின் உற்பத்தி நிலையம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் கடந்த புதன்கிழமை முற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

கெரவலபிட்டிய திண்மக் கழிவு மின் உற்பத்தி நிலையத்தில் நாளொன்றுக்கு 600 - 800 தொன் நகர திண்மக் கழிவை பயன்படுத்தி தேசிய மின் கட்டமைப்பிற்கு 10 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மின் உற்பத்தி நிலையத்தை திறந்து வைப்பதற்கான நினைவு பலகையை திறந்துவைத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அங்கு வருகை தந்திருந்தவர்களுடன் நட்பு ரீதியான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

கொழும்பு நகரின் நகர திண்மக்கழிவை அகற்றுவதற்கு இதன்மூலம் நிலையான தீர்வொன்று ஏற்படுத்தப்படும். அத்துடன், புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்திக்கும் இந்தத் திட்டம் நிலையான தீர்வாக அமையும். கொழும்பு நகர சபை, எய்ட்கன் ஸ்பென்ஸ் நிறுவனம் மற்றும் இலங்கை மின்சார சபை இணைந்து இந்தத் திட்டத்துக்கு பங்களிப்பு செய்துள்ளன.

எய்ட்கன் ஸ்பென்ஸ் நிறுவனம் இந்தத் திட்டத்துக்காக ஒரு கோடியே 50 லட்சம் ரூபா செலவிட்டுள்ளது. மிகவும் அழகான சுத்தமான நகர்ப்புற சூழலை உருவாக்குவதற்கும், குடிமக்களின் வாழ்க்கை நிலையை உயர் மட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கும் இதன் மூலம் வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

குறித்த நிகழ்வில் அமைச்சர்களான டளஸ் அழகப்பெரும, சீ.பீ.ரத்நாயக்க, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க, நாலக கொடஹேவா, சீதா அரம்பேபொல, நிமல் லன்சா மற்றும் மேல் மாகாண ஆளுநர் மார்ஸல் ஒஃப் த ஶ்ரீலங்கா எயார் ஃபோஸ் ரொஷான் குணதிலக, எய்ட்கன் ஸ்பென்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஹெரி ஜயவர்தன, கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க, மின்சக்தித்துறை அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, இலங்கை மின்சார சபையின் தலைவர் விஜித ஹேரத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மஸ்கெலியா வனப்பகுதி விஷமிகளால் தீ வைப்பு!



மஸ்கெலியா மொக்கா தோட்ட மிட்லோதியன் பிரிவின் மேற்பகுதியில் உள்ள சிவனொளிபாத மலை தொடரில் உள்ள வனப்பகுதிக்கு நேற்று வியாழக்கிழமை பகல் விஷமிகளால் தீ வைக்கப்பட்ட நிலையில் வனபகுதியில் தீ மிக வேகமாக பரவி வருகிறது.

கடந்த சில வாரங்களாக மத்திய மலைநாட்டில் கடும் வறட்சி நிலவுகின்றமையால் அதிகளவு உஷ்னமான காலநிலை தோன்றியுள்ளது.

இவ்வாறான காலப்பகுதியில் பற்றைகளுக்கு விஷமிகள் அடிக்கடி தீ வைத்து விடுகின்றனர்.

இதனால் வன விலங்குகள் மற்றும் பறவைகள் அழிந்து போகும் அபாயம் தோன்றி உள்ளதென நல்லதண்ணி வனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

எஹெலியகொட – பரக்கடுவை பகுதியில் துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பரக்கடுவை பகுதியில் கடந்த புதன்கிழமை இரத்தினபுரி குற்றப்புலனாய்வு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துருகிரிய பகுதியில் உள்ள பாதாளகுழு உறுப்பினர் ஒருவரின் உதவியாளராக சந்தேக நபர் செயற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. சந்தேக நபரை பொலிஸார் தேடி வந்துள்ளமையுடன், இவர் தலைமறைவாகியிருந்த நிலையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து கைத்துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார், குறித்த பகுதியில் அவருடன் தொடர்பை பேணியவர்கள் தொடர்பிலும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

குற்றப்புலனாய்வு பிரிவினர் சந்தேக நபரை இன்று அவிசாவளை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளனர்.

# அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கி நாட்டுக்கு பணியாற்றத் தயார்; ஐ.தே.க. கூறுகின்றது

கொழும்பு, ஜன. 19

அரசியல் வேறுபாடுகளைக் களைந்து நாட்டின் நலனுக்காகச் செயற்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, பரந்துபட்ட கூட்டணியை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அரசியல் கூட்டணியை அமைப்பது தொடர்பாக இதுவரை எந்த முடிவும் எட்டப்படவில்லை என்றும் ருவான் விஜேவர்தன கூறினார்.

தற்போது நாடு ஆபத்தான நிலையில் இருப்பதால், அரசியல் நடவடிக்கைக்குப் பதிலாக நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பாகக் கட்சி கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பேக்கரி உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை!

பேக்கரி உணவு பொருள்களுக்கு பயன்படுத்தப்படும் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெயின் அதிக விலை காரணமாக பேக்கரி உரிமையாளர்கள் கடுமையாக சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர் என அனைத்து இலங்கை பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

அதனால் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்க்கு விதிக்கப்படும் வரியைக் குறைக்க அல்லது பேக்கரி உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஒன்பது வளைவுப் பாலத்துக்கு 100 வருட தேசிய உரிமையாக்கல்!

பதுளை மற்றும் தெமோதரைக்கு இடைப்பட்ட ரயில் பாதையில் காணப்படும் ஒன்பது வளைவு பாலத்தை தேசிய உரிமையாக பிரகடனப்படுத்தி, நினைவு முத்திரை ஒன்றையும் வெளியிட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

1921 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பாலத்துக்கு இந்த வருடம் 2021 ஆம் ஆண்டுடன் 100 வருடங்கள் நிறைவு பெறுகின்றன.

கடல் மட்டத்திலிருந்து 3,100 மீற்றர் உயரத்தில் கட்டப்பட்டுள்ள இந்தப் பாலம் செங்கல் மற்றும் சீமெந்துகள் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். 25 அடி அகலம், 80 அடி உயரம், 300 அடி நீளம் கொண்டதாகக் இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பொறியியலாளராக டீ.ஜே. விமல சுந்தரவும் வடிவமைப்பாளராக ஹரல்ட் குத்போர்ட் மார்வூட்டும் இதனை உருவாக்குவதில் முன்னோடியாகச் செயற்பட்டபோது, பீ.கே. அப்புஹாமி என்பவராலேயே இந்தப் பாலம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாக வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது.

இன்றைக்கும் ஒருநாளைக்கு சுமார் 6 தடவைகள் ஒன்பது வளைவு பாலம் ஊடக ரயில் பயணங்கள் இடம்பெறுகின்றன. உள்நாட்டு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை வென்றுள்ள இந்த ஒன்பது வளைவுப் பாலம் இலங்கையின் பிரதான சுற்றுலாத் தளங்களில் ஒன்றாகவும் காணப்படுகிறது.

ஈழத்துச் சிதம்பர யாத்திரை 16

# நந்திக்கொடி சுட்டி நிற்கும் தியாகச் சிறப்பு



● வே.வரதசுந்தரம்

**இடபக் கொடியோன் எங்கள் சுந்தரேசப் பெருமான்**
**அப்பனை நந்தியை ஆரா அமுதினை**
**ஒப்பிலி வள்ளலை ஊழிமுதல்வனை**
**எப்பரிசு ஆயினும் ஏத்துமின் ஏத்தினால்**
**அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே**

ஈழத்துச் சிதம்பரத் திருத்தலம் யாத்திரைவந்த சிவனடியார்கள் கோயில் கோபுர உச்சியிலும் கோயில் இருமருங்கிலும், பலஇடங்களிலும் நந்திக்கொடி பறந்து கொண்டிருத்தலைக் கண்டு தருமமே ஓங்கி நிற்றலைக் காண்கின்றனர். நந்தி தருமதேவதை அன்றோ! திருமூலர் அருளிய இப்பாடலைப் பாடித் திளைக்கினறனர்.

நந்திக்கொடி நமக்குப் பல்வேறு விழுமியங்களை வியம்பிநிற்கிறது. சைவமக்கள் வாழ்க்கையை எப்படி நோக்குகின்றனர் என்பதை எடுத்துக் கூறுவது நந்திக்கொடி. மக்கள் சேவையை வலியுறுத்துவது நந்திக் கொடி. தியாகத்தின் விழுப்பத்தை உணர்த்தி நிற்பது நந்திகொடி.

திருப்பள்ளிஎழுச்சிப் பாடலில் மாணிக்கவாசகர் சிவனை ஏற்றுயர் கொடியுடையாய் என்றே பாடுவர். ‘ஏற்றுயர் கொடியுடையாய் எனையுடையாய் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே’. தருமதேவதை சிவனார் வாகனம். அது அறத்தைக் குறிக்கும். எனவே நந்திக்கொடி நமக்கு அறத்தை, அறவாழ்வை உணர்த்துவது.

**‘அறனுரு வாகியஆனே றூர்தல்**
**இறையவன் யானென இயற்றுமாறே’**

நந்திக் கொடிநமக்குப் பிரணவத்தை, ஓங்காரத்தை உணர்த்தி நிற்கிறது. ஓங்கார வடிவத்தைக் கோயிற் கோபுர உச்சியில் கம்பீரமாகப் பறக்கும் நந்திக்கொடி நமக்கு ஒவ்வொரு நாளும் நினைவூட்டும். அதை ஓவணம் என்பர். ஓ+வணக்கம் என்றுபொருள். அதனைச் சுந்தரர் பாடுகிறார்.

**‘ஓவணமேல் எருதென்றேறும்**
**ஓணகாந்தன் தளியுளார்’**

ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு அரசும் தனக்கென அமைக்கும் கொடியில் அந்தந்த நாடுகளின் இயற்கை அழகை, வனங்களை, இலச்சினையை இடுக்கின்றன. அம்மரபு வழிநின்று சைவர்கள் தமது வேட்கையை, வாழ்வின் விழுப்பொருளாகத் தமது கொடியில் அறத்தையும், ஓங்காரத்தையும் பிரதிபலிக்கின்றனர். சிவனார் கொடியையே அவர்கள் தமது இல்லங்களிலும், கோயில்களிலும் ஏற்றி பெருமிதம் அடைகின்றனர். பெருமகிழ்வு பெறுகின்றனர். வானுற ஓங்கிப் பறக்கும் வண்ணக் கொடியாம் நந்திக்கொடி இதனையே பறைசாற்றும்.

**‘ஏறுடை வேல்கொடி எந்தை’**
**‘ஏறுவிடைக் கொடி எம்பெருமான்’**
**‘ஏறு தாங்கிய கொடியரோ’**
**‘இடபங்கொடி யேற்றிவந்து**
**‘அம்பலத்துள் ஏறும்அரன்’**
**‘நரவிடை நற்கொடியுடை நாதன்’**

இவ்வாறெல்லாம், நந்திக்கொடியைக் குறிப்பிட்டு சிவனார் புகழ்பாடும் திருமுறைகள். மணிவாசகப் பெருமான் சிவபெருமானின்கொடி எதுவென்று எமக்கு உணர்த்த கேள்வி - பதில் பகுதியை நமது ஊடகங்கள் இன்று செய்வது போன்று, திருவாசகத்தில் கையாளுகின்றார். தனது வினாவைப் பசுங்கிளியிடம் கேட்கின்றார். பெருந்துறைக் கோனாம் எமது இறைவன் சிவனாருக்கு அழகுதருங் கொடி எது என்பதே அவ்வினா. நந்திக் கொடியே என்பது விடையாக அமைகிறது. அப்பாடல் இங்கு காண்பீர்.

**சோலைப் பசுங்கிளியே! தூறீர்ப்**
**பெருந்துறைக்கோன்**
**கோலம் பொலியும் கொடிபகராய்**
**- சாலவும்**
**ஏதிலார் துண்என்ன மேல்விளங்கி ஏர்காட்டும்**
**கோதிலா ஏறாம் கொடி.**

நந்திக் கொடியின் தொன்மையை நமக்குக் காட்டுவது ஒருபுறநானூற்றுப் பாடலாகும். பாரதம் பாடிய பெருந்தேவனார் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தில் நந்திக் கொடியைப் பாடுகிறார்.

**கண்ணி கார்நறுங் கொன்றைக் காமர்**
**வண்ணமார்பின் தாருங் கொன்றை**
**ஊர்திவால் வெள்ளேறே சிறந்த**
**சீர்கெழு கொடியும் அவ்ஏறு என்ப**
**கறைமிடரு அணியருளும் அணிந்தன்று**
**மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே**
**பெண்ணுரு ஒருதிறன் ஆகின்ற, அவ்வுந்த**
**தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்.**
**பிறைநுதல் வண்ணம் ஆகின்ற அப்பிறை**
**பதிணெண் கண்ணும் ஏத்தவும் படுமே**
**எல்லா உயிர்க்கும் ஏமமாகிய**
**நீரறிவு அறியாக் கரகத்துத்**
**தாழ்சடை பொலிந்த அருந்தவத் தோற்கே!**

திருவிழாக் காலங்களில் சிவாலயங்களில் நந்திக்கொடி ஏற்றும் மரபுண்டு. இது நமது சைவசமய மரபு. மார்கழி உற்சவ காலத்தில் உமாபதி சிவாச்சாரியார் பாடிக்கொடி ஏறியமை நாம் அறிந்ததே.

மெய்ப்பொருளை உணர்த்த, நாம் பரிபூரண நிலையடைய நந்திக்கொடியினை ஏற்றுகிறோம்.



நந்தியின் வடிவத்தில் சிவனார் திருவருள் பொழிகிறார். தருமத்தின் சின்னமாம் நந்திக் கொடியை, தியாகத்தின் வடிவமாம் நந்திக் கொடியை, இறைவன் திருவருள் நமக்குக் கைகூடவேண்டும் என்ற உறுதியைத் தருவதற்காக ஏற்றுகிறோம். சிவனார் முழுமுதற் கடவுளர் என்பதால் சிவனார் கொடியே இந்துசமயக் கொடி என்பதையாம் சிந்திப்போமாக!.

நமது நாட்டில் நீண்ட நாள்களாக நந்திக்கொடியைப் பரப்பும் பணியில் அயராது ஈடுபட்டுவரும் சைவப்பெருமகன் அகில இலங்கை ஆறுமுகநாவலர் சபைத் தலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்கள் நந்திக்கொடியின் மாண்பினை தான்ஆக்கிய ‘நந்திக்கொடி ஏற்றீர்! கொடிக்கவி பாடீர்’ என்ற நூலில் கூறுவது காணீர்:

‘உமாபதிசிவம் தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவர் ஆவார். மறைஞான சம்பந்தர் அவர்தம் குரு. அந்தணர் குலத்தைச் சார்ந்தவர் அல்லர். அவருடனான தொடர்பை விரும்பாத தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதிசிவத்தைத் தமது சமூகத்திலிருந்து நீக்கிவிட்டனர். அதனால் சிதம்பரம் கோயில் பூசைசெய்யும் உரிமையையும் அவர் இழக்க நேரிட்டது. வெளியே கொற்றவன் குடியில் வாழ்ந்து வந்தார்.



நந்தியின் வடிவத்தில் சிவனார் திருவருள் பொழிகிறார். தருமத்தின் சின்னமாம் நந்திக் கொடியை, தியாகத்தின் வடிவமாம் நந்திக் கொடியை, இறைவன் திருவருள் நமக்குக் கைகூடவேண்டும் என்ற உறுதியைத் தருவதற்காக ஏற்றுகிறோம். சிவனார் முழுமுதற் கடவுளர் என்பதால் சிவனார் கொடியே இந்துசமயக் கொடி என்பதையாம் சிந்திப்போமாக!.

சிதம்பரம் கோயில் மார்கழித் திருவெம்பாவை மகோற்சவத்தில் கொடியேற்றத் தினமொன்றில் தில்லைவாழ் அந்தணர்கள் அனைவரும் முயன்றும் நந்திக்கொடியை ஏற்ற முடியவில்லை. அந்தணர்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். அவ்வேளை ‘உமாபதிசிவத்தை அழைத்து, அவரைக்கொண்டு ஏற்றுவீர் கொடியை’ என்ற அசரீரி வாக்கு விண்ணில் ஒலித்தது. அதன்படி உமாபதிசிவத்தை அணுகி, இறைவனின் அசரீரிபற்றிக் கூறி அவரை அழைத்து வந்தனர்.

உமாபதிசிவம் கொடிமரத்தின் அருகேநின்று கொடிக்கவியைப் பாடினார். முதற்பாடலைப் பாடியதுமே நந்திக்கொடி எவ்வித தங்குதடையுமின்றி கொடித்தம்பத்தில் ஆரோகத்தின் உச்சியை அடைந்து பட்டொளி வீசிப்பறந்தது.’

ஈற்றில் விடைக்கொடிச் செல்வர் தனபாலா அவர்கள் விடுக்கும் வேண்டுகோள் இதோ: ‘சைவமக்கள், இந்துக்கள் கொடிக்கவி பாடும் எமது சைவமரபினைப் பேணிக்காக்க வேண்டும். நந்திக்கொடியை ஏற்றும் போதும், பாடும்போதும் புறவழிபாட்டிலும், அகவழிபாட்டிலும் ஈடுபடவேண்டும். அதன் மூலம் நாம் நல்ல கதி பெறவேண்டும். இதுவே அடியேனின் பெருவிருப்பம்.’

உமாபதிசிவாச்சாரியார் பாடிய கொடிக்கவி கேளீர்:

**அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும்**
**நாலெழுத்தும்**
**பிங்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் -**
**நெஞ்சழுத்திப்**
**பேசு மெழுத்துடனே பேசா எழுத்தினையும்**
**கூசாமற் காட்டக் கொடி.**
**ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேயிடம் ஒன்றுமே**
**லிடில் ஒன்று**
**ஒளிக்கும் எனினுமிருள் அடராது உள்ளுயிர்க்**
**குயிராய்**
**தெளிக்கும் அறிவுதிகழ்ந் துளதேனும் திரிமலத்தே**
**குளிக்கும் உயிரருள் கூடும்படி கொடிகட்டினனே!**

(தொடரும்...)

# திருகோணமலை பொது வைத்தியசாலை சிற்றூழியர் அடையாள வேலைநிறுத்தம்!



திருகோணமலை பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள், 10 கோரிக்கைகளை முன்வைத்து, வைத்தியசாலை வளாகத்தில் கடந்த 17 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 10.30 மணி வரை அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஒன்றிணைந்த சுகாதார ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

வாரத்தில் மேலதிக 8 மணி நேர சம்பளத்தில், 180 நாள்களை நிறைவு செய்த சகல சுகாதார சிற்றூழியர்கள், சமயாசமய ஊழியர்கள் உடனடியாக நிரந்தரமாக்கிக் கொள்ளல், சீருடைக் கொடுப்பனவை 15 ஆயிரம் ரூபாவாக மாற்றுதல், சகல ஊழியர்களுக்கும் விசேட அனர்த்தக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளல், தாமதமான செவிலியர் நியமனங்களில் விரைவில் பெற்றுக்கொள்ளல், மேலதிக நேர வேலையை முறையில் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர்.

அத்துடன், வைத்தியசாலை சிற்றூழியர்கள் குறையை நிவர்த்தி செய்தல், முகாமைத்துவ சேவை பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் நியமனம் பெறும் 45 வயதுக்கு மேற்பட்டவர்களின் ஓய்வூதிய உரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் போன்ற கோரிக்கைகளையும் வலியுறுத்தி, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதற்காக பல வருடங்களாகத் தாம் போராடி வருவதாகவும் கடந்த அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகக் கூறினாலும் இதுவரை ஒரு கோரிக்கையும் நிறைவேற்றப் படவில்லை எனவும் மிக விரைவில் தமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேட்டுக்கொண்டனர்.

# திருமலையில் சிறுமி டெங்கினால் சாவு

டெங்குநோய்த் தொற்றுக்கு உள்ளான சிறுமி ஒருவர் திருகோணமலையில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த 07 வயதுச் சிறுமி ஒருவர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளான நிலையில் அங்குள்ள வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

அவருடைய உடல் நிலை மோசமடைந்து வந்தமையால் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் கொண்டு வரப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

இருந்தபோதிலும் அங்கும் சிகிச்சை பலனளிக்காமல் இன்று அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் டெங்கு நோயின் தாக்கம் தீவிரம் பெற்றுவருகின்றமை தொடர்பில் தொடர்ந்தும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

கடந்த காலங்களில் டெங்குநோயைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் தீவிரமாக செயற்பட்டுவந்தமையாலேயே டெங்கு நுளம்புப் பெருக்கம் பெருமளவில் தடுக்கப்பட்டு வந்திருந்தது.

கொரோனாத் தொற்று தீவிரம் பெற்றுள்ளமையால் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் கிராம ரீதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் தீவிர கவனம் செலுத்தமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பதில் சுகாதார அமைச்சரை நியமிப்பதில் காலதாமதத்துக்கான காரணம் என்ன?

## சந்தித் சமரசிங்க கேள்வி

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிகொரோனாவைரஸ் தொற்றுக்குள்ளாகி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 19 நாள்கள் கழித்தே பதில் சுகாதார அமைச்சரொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத்தாமதத்துக்கானகாரணம் தொடர்பிலும் சுகாதார அமைச்சர் இல்லாத காலப்பகுதியில் தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்கின்றமை உள்ளடங்கலாக சுகாதாரத்துறை சார் முக்கிய தீர்மானங்கள் யாரால் மேற்கொள்ளப்பட்டன என்பது தொடர்பிலும் அரசாங்கம் தெளிவுப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்தித் சமரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சியின்தலைமையகமான சிறிகொத்தாவில் கடந்த புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு மிகப்பாரிய நெருக்கடியொன்றுக்கு முகங்கொடுத்திருக்கும் வேளையில், பதில் சுகாதார அமைச்சரை நியமிப்பதில் காலதாமதம் ஏற்பட்டமைக்கான காரணம் என்னவென்பதை அரசாங்கம் பொதுமக்களுக்கு விளக்கவேண்டும். பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதில் அரசாங்கம் தோல்வியடைந்திருக்கிறது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிகொரோனாவைரஸ் தொற்றுக்குள்ளாகியிருக்கின்றமை கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி உறுதிசெய்யப்பட்டதுடன், அவர் 28 ஆம் திகதி தேசிய தொற்று நோய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அவசர சிகிச்சைப்பிரிவிற்கு மாற்றப்பட்டார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சுகாதார அமைச்சரால் ஏனைய பொறுப்புக்களைக் கண்காணிக்க முடியாத நிலையேற்பட்டது. எனினும் அரசாங்கம் பதில் சுகாதார அமைச்சரொருவரை நியமிப்பதை 19 நாள்கள் தாமதப்படுத்தியிருக்கிறது. கடந்த செவ்வாய்க்கிழமையே பதில் சுகாதார அமைச்சர் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், நாட்டில் 19 நாள்களுக்கு சுகாதார அமைச்சரொருவர் இல்லாமலிருந்த காலப்பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றால் 98 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். இதுவரை காலமும் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களில் நான்கில் ஒரு பங்கினர் இக்காலப்பகுதியில் மரணித்திருக்கிறார்கள். தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதனால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையிலும் கூட, இந்த நிலைவரத்தைக் கையாளுவதற்கு பதில் சுகாதார அமைச்சரொருவரை நியமிப்பதற்கு அரசாங்கம் தவறியிருக்கிறது.

சுகாதாரத்துறை சார்ந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் இல்லாமலிருந்த காலப் பகுதியில், அந்தத் தீர்மானங்கள் யாரால் மேற்கொள்ளப்பட்டன என்பது தொடர்பாக அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும். அது மாத்திரமன்றி இந்தக் காலப்பகுதியில் கொவிட் - 19 தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளிலும் அரசாங்கம் ஈடுபட்டிருந்தது. சுகாதார அமைச்சர் இல்லாத நிலையில், இம்முக்கிய பணிகள் யாரால் முன்னெடுக்கப்பட்டன? இவை தொடர்பில் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் கேள்வி எழுப்பியமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை எண்ணெய் தாங்கிகள் கூட்டு முயற்சியில் அபிவிருத்தி!

## இந்தியா மீண்டும் மீண்டும் வலியுறுத்தல்

இலங்கை - இந்திய கூட்டு ஒத்துழைப்புகளின் முக்கிய மற்றும் முன்னுரிமை மிக்க பரிமாணங்களில் ஒன்றாக எரிசக்தி ஒத்துழைப்பு அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தீவுப்பகுதிகளின் எரிசக்தி பாதுகாப்பிற்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்ற உறுதிப்பூண்டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் திருகோணமலை எண்ணெய் தாங்கிகளின் வளர்ச்சி மற்றும் செயற்பாட்டுக்கான பரஸ்பர நன்மை பயக்கும் வகையில் இரு தரப்பு ஒத்துழைப்புடன் ஊக்குவிப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் இரு தரப்பு கூட்டு உற்பத்தி உறுதிப்பாட்டைத்தொடர்வதற்கு எதிர்பார்ப்பதாக இந்திய மேலும் தெரிவித்துள்ளது.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை மீண்டும் இலங்கை வசமாக்குவது தொடர்பில் கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் இலங்கை தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடல் வெற்றியளித்துள்ளதாகவும் அதனடிப்படையில் 2017 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட கூட்டு முயற்சிக்கான இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை அறிவித்துள்ளது.

2003 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வழங்கப்பட்ட இந்த எண்ணெய் தாங்கிகளை மீளப் பெற்றுக்கொள்வதில் இலங்கை நீண்ட காலமாக பேச்சுகளை முன்னெடுத்திருந்த போதிலும் இந்தியா கூட்டு முயற்சியிலான திட்டங்களையே வலியுறுத்தி இருந்தது. இதனையே தற்போதும் வலியுறுத்தியுள்ளதாக இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

மறுபுறம் வடக்கில் நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய மூன்று தீவுகளை உள்ளடக்கி புதுப்பிக்கத்தக்க இரட்டை ரக சக்தி திட்டம் சீனாவுடன் இணைந்து முன்னெடுக்கப்பட உள்ளதாக இலங்கை அண்மையில் அறிவித்திருந்தது.

அதனை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை அரசாங்கம் உறுதியாகவே சீனாவுடன் அந்தத் திட்டத்தை முன்னெடுப்பதாக அறிவித்திருந்த நிலையிலேயே திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் விவகாரம் மற்றும் தீவுப்பகுதிகளுக்கான எரிசக்தி பாதுகாப்பு தொடர்பில் இரு தரப்பும் நிலைப்பாடுகளை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தினம் ஒரு விவசாயத் தகவல்



கபில நிற தாவர தத்தி **(brown plant hopper)**
**Nilaparvata lugens**
**order :- Hemiptera (Delphacidae)**

**வாழ்க்கை வட்டம்**

நீண்ட சிறகுள்ள நிறையுடலி இலை மடலில் 300 முட்டைகள் இடும்.7 - 9 நாள்களின் பின் அணங்கு வெளியேறும்.5 அணங்கு பருவங்கள் கொண்டது. (13- 15 நாள்கள்).1ம் அணங்கு வெண்ணிறமானது,பின் கபிலமாகும்.நிறையுடலி 14 நாள்கள் வாழும்.

**சேதம் -**

பயிர்கள் முதலில் மஞ்சளாகி பின் உலர்ந்து இறக்கும். தண்டில் சாற்றை உறிஞ்சும். **Virus** காவியாக தொழிற்படல். **(Grassy stunt,Ragged stunt,wiltered stunt)**

**கட்டுப்பாடுஎதிர்ப்பினங்கள் பயிரிடல் -**

1. **(Bg-300, Bg-304, Bg-352, Bg-357)**
2. நீர்முகாமைத்துவம் செய்தல்.
3. இரசாயனம் விசிறல். **(Apload,Carbofuran.BPMC)**
4. உயிரியல் முறை - இரைகௌவிகள் (மிரிக்மூட்டுப்பூச்சி, தும்பி, எறும்புக்குளவி பயன்படுத்தல்)

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை வழங்குவது அரசின் பொறுப்பு



## சஜித் அணி இடித்துரைப்பு

**காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை நீக்க அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுக்கின்றது. அனைத்து விடயங்களையும், அரசியல் கோணத்தில் கணிப்பதை அரசு முதலில் தவிர்த்துக்கொள்ள வேண்டும். 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் தற்போது நியாயத்தைக் கோரி நிற்பதைப் போன்றே வடக்கு - கிழக்கு மக்களும் நியாயம் கோருகிறார்கள். எனவே, பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு உரிய தீர்வை வழங்குவது அரசின் பொறுப்பாகும்.**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்தன தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனவாதம் மற்றும் வெறுப்புப் பேச்சு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி அரசு செயற்படுகின்றது. பல்லின சமூகம் வாழும் நாட்டில் ஓர் இனத்துக்கு மாத்திரம் அனைத்து விடயங்களிலும் முன்னுரிமை வழங்கும்போது தேவையற்ற பிரச்சினைகள் தோற்றம் பெறும். வளர்ச்சி பெற்றுள்ள நாடுகள் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து அரசியல் மற்றும் சமூக மட்டத்தில் முன்னேறிச் செல்கின்றன.

இதனை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

பல்லின சமூகம் வாழும் நாட்டில் அனைத்து இன மக்களின் ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேற முடியும்.

தற்போதைய அரசு பெரும்பான்மை இன மக்களுக்கு முன்னுரிமை வழங் குவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு தமிழ், முஸ்லிம் மக்களைப் புறக்கணித்து, இன வாதத்தைத் தூண்டி அதன்மூலம் தனது இயலாமையை மறைத்துக் கொள்கின்றது. அரசு இனவாதத்தைத் தூண்டி விடுகின்றது என்பதை பெரும்பான்மையின மக்கள் நன்கு அறிவார்கள்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் வீண் செலவுகளை ஏற்படுத்துகின்றது. அதனைத் தொடர்ந்து நடத்திச் செல்வது பயனற்றது என்று குறிப்பிட்டு அந்தக் காரியாலயத்தை நீக்க முயற்சிக்கின்றது.

இது முற்றிலும் தவறான நோக்கமாகும். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் தீர்வு காண முடியாது. தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தற்போதைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. - என்றார்.

---

## இலங்கையில் பா.ஜ.க. ஆட்சியா?

### இந்தியாவில் உள்ள 'விக்னேஸ்வரன்'களின் பேச்சே இது என்கிறார் அமைச்சர் வீரசேகர



இலங்கையில் விக்னேஸ்வரனைப் போன்ற சிந்தனையில் உள்ள இந்திய மாநில முதலமைச்சர் ஒருவரே பாரதிய ஜனதா கட்சி இங்கு ஆட்சியமைக்கும் என்ற கருத்தைக் கூறியுள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சி இலங்கையில் ஆட்சியமைக்கும் திட்டத்தில் இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபை முதலமைச்சராக இருக்கும்போது, வடக்கில் சிங்கள மக்கள் வாழ்க்கை நடத்த உரிமை இல்லை எனத் தெரிவித்திருந்தார். அவ்வாறான இந்திய முதலமைச்சர் ஒருவரே இதனையும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசியல் கட்சி யொன்றை அமைத்து, ஆட்சிப் பீடமேறுவதாக இந்திய மாநில முதலமைச்சர் ஒருவர் மாத்திரமே கூறியுள்ளார். அது இந்தியாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாடல்ல.

இறையாண்மையுடன் உள்ள ஒரு நாட்டுக்கு அவ்வாறான எச்சரிக்கைகளை விடுக்க முடியாது.

நாம் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்துக்கொண்டு செயற்படுவோம் - என்றார்.

---

# சர்வதேச விசாரணைக்கு இடமளியாது இலங்கை!

## கோட்டா அரசு திட்டவட்டம்



இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சர்வதேச பொறிமுறைக்கு இலங்கை ஒரு போதும் அனுமதிக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்ற வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆலோசனைக்குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பொறிமுறை தொடர்பில் அரசின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் அரசியல் கட்சிகளுக்கிடையே மாற்றுக் கருத்துக்கள் இருந்தாலும், நாட்டுக்கு எதிரான அழுத்தங்கள் சர்வதேச அரங்கில் முன்வைக்கப்படும்போது, அனைவரும் ஒருமித்த நிலைப்பாட்டில் இருக்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

சர்வதேச ரீதியில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஸ்பெயின், ருமேனியா ஆகிய நாடுகளில் தூதரகங்களை அமைப்பதற்கும் மடகஸ்காரில் தூதரக அலுவலகமொன்றை அமைப்பதற்கும், லீக்கின்ஸ்டைன் நாட்டுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மேலும் குறிப்பிட்டார்.

---

# வீட்டுக்குள் புகுந்த கும்பல் ஓட்டோவுக்குத் தீ வைப்பு!

## நவாலியில் அடாவடி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., நவாலி, அரசடியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கும்பல் ஓட்டோ ஒன்றுக்குத் தீ மூட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

அந்தக் கும்பலைத் துரத்திச் சென்ற இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றை மீட்டு மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம் பெற்றது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 5 பேர் கொண்ட கும்பலே இந்த அடாவடியில் ஈடுபட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களை வெளிநாட்டிலிருந்து நடத்துபவர் எனப் பொலிஸார் அடையாளப்படுத்துபவரின் வீட்டுக்குள் புகுந்தே ஓட்டோவுக்குத் தீவைக்கப்பட்டது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து கும்பல் தப்பிச் சென்ற நிலையில் அந்தப் பகுதி இளைஞர்கள் துரத்திச் சென்றுள்ளனர். அதனால் மோட்டார் சைக்கிளை வீதியில் கைவிட்டு கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

அந்த மோட்டார் சைக்கிள் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

---

# ஜனாஸா விவகாரத்தில் இலங்கையின் பின்வாங்கல் ஏமாற்றம் அளிக்கின்றது!

## அமெரிக்கத் தூதுவர் கவலை



இலங்கையில் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களை எரிக்கும் பாரபட்சமான கொள்கையை முடிவுக்குக் கொண்டு வருவதில் இருந்து அரசும் பிரதமரும் பின் வாங்குவது ஏமாற்றமளிக்கின்றது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக அரசு ஒன்றிடமிருந்து மக்கள் (அண்மையில் உயிரிழந்தவர்கள் உட்பட) அவர்களின் உரிமைகள் தொடர்பில் இதனைவிட கூடுதல் மரியாதை யைப் பெற உரித்துடையவர்கள் எனவும் தூதுவர் டெப்லிட்ஸ் இன்று பதிவிட்டுள்ள டுவிட்டர் தகவலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை புதைக்க அனுமதி அளிக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார்.

அப்போது அந்தக் கருத்தை வர வேற்று, அமெரிக்கத் தூதுவர் டுவிட்டரில் பதிவிட்டிருந்தார்.

எனினும், இந்த விவகாரத்தில் சுகாதார நிபுணர்களின் கருத்தை மீறி நடவடிக்கை எடுக்க முடியாது என்று அரசு ஓரிரு நாள்களிலேயே அறிவித்துவிட்டது. இந்தநிலையிலேயே, அரசின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் தாம் ஏமாற்றம் அடைந்துள்ளார் என்று அமெரிக்கத் தூதுவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலை பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவோருக்கு மட்டும் அனுமதி

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விழாவை நடத்த முடிவு



நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந்தொற்று அபாயத்தை அடுத்து, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, சுகாதாரத் துறையினரால் வழங்கப்படும் நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், பட்டம் பெறுபவர்களைத் தவிர பெற்றோர் மற்றும் விருந்தினர்கள் எவரும் விழா மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் யாழ். பல்கலைக் கழக கொவிட் 19 தடுப்பு, முகாமைத்துவக் குழுவின் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி எஸ்.சுரேந்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வு தொடர்பாக ஊடகங்களுக்கான அறிக்கை இன்று வெளியிடப்பட்டது. யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர், கொவிட் 19 தடுப்பு, முகாமைத்துவக் குழுவின் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி எஸ். சுரேந்திரகுமாரன், பதிவாளர் வி.காண்டீபன், கல்வி, வெளியீட்டுக் கிளையின் உதவிப் பதிவாளர் எஸ். கே. பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண் டிருந்தனர்.

இதன் போது, யாழ். பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர் கருத்துத் தெரிவிக்கையில், பட்டமளிப்பு விழாவின் போது கைக்கொள்ளப்படவேண்டிய நடைமுறைகள் – ஒழுங்குகள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டார்.

சமகால கொவிட் 19 பெருந்தொற்றுப் பரவலைக் கருத்தில் கொண்டு பல்கலைக் கழகம் மேற்படி பெருந்தொற்றுப் பரவலைத் தடுப்பதில் அதி கூடிய கவனத்தைச் செலுத்தியுள்ளது. நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் அச்சம் காரணமாக சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள் அறிவுறுத்தல்கள் இறுக்கமாகப் பின்பற்றப்படும்.

இதன் பிரகாரம் பட்டம் பெற வருபவர்கள் மட்டும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பட்டமளிப்பு விழாவில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர். பட்டதாரிகள் அனைவரதும் வெப்பநிலை பரிசோதிக்கப்படுவதுடன், அவர்களின் கைகளும் சுத்திகரிப்புத் திரவத்தினால் கழுவப்படும். சமூக இடைவெளியைப் பேணும் வகையில் பங்கேற்பவர்கள் ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளியில் அமர்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வுகளில் பங்குபற்ற வந்தவர்களோ, ஏனையவர்களோ உள்ளக விளையாட்டரங்குக்கு வெளிப் புறங்களில் ஒன்று கூடுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேலும் நிகழ்வு இடம்பெறும் சுற்றாடலில் உணவு கையாளும் நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகளை அமைப்பதற்கு இம்முறை அனுமதி வழங்கப்படவில்லை. பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு உருவாக்கப்பட்டுள்ள கொவிட் 19 தடுப்பு, முகாமைத்துவக் குழு மேற்படி நடைமுறைகளை இறுக்கமாகவும், வினைத்திறனுடனும் மேற்கொள்ளத் தயாராக உள்ளது.

பட்டம் பெறும் மாணவர்கள் உள்நுழையும், வெளியேறும் பாதைகள் நன்கு வரையறை செய்யப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் பட்டதாரிகள் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள மருத்துவ பீட பிரதான வாயிலுக்கு ஊடாக மட்டுமே உள் நுழைவதற்கு அனுமதிக்கப்படுவர். பட்டமளிப்பு அமர்வு முடிந்து வெளியேறுவோர் பல்கலைக்கழக மைதானத்தின் பிரதான வாயிலூடாக மட்டுமே வெளியேற அனுமதிக்கப்படுவர்.

ஆடியபாதம் வீதி, வளாக வீதி, தபால் பெட்டி வீதி மற்றும் மைதானத்தை அண்டிய பகுதிகளில் வாகனங்கள் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. வளாக ஒழுங்கையினுள் வாகனங்களில் வருபவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் போக்குவரத்து ஒழுங்குகளைக் கவனிப்பார்கள். பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவார்கள்.

பட்டமளிப்பு விழா அரங்குக்கு உள்ளேயும், வெளியேயும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதோடு, இயலுமானவரை தேவையற்ற முறையில் கூட்டம் கூடுவதைத் தவிர்த்து – சமூக இடைவெளியைப் பேணுவதன் மூலம் இந்த நிகழ்வு வெற்றிகரமாக நிறைவு பெறுவதற்கு பல்கலைக்கழக சமூகம் அனைவரது ஒத்துழைப்பையும் எதிர் பார்க்கின்றது.

ஊடக நிறுவனங்களுக்குத் தேவையான செய்திகளையும், தகவல்களையும் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு ஊடாக வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இம்முறை பட்டமளிப்பு விழா நிகழ்நிலையாக இணையம் வாயிலாகவும், தொலைக்காட்சி ஊடாகவும் ஒளிபரப்பப்படும்.

வழமை போன்று பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி நினைவுப் பேருரைகளும் இடம்பெறவுள்ளன. சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரைகளை இம்முறை சிரேஸ்ட பேராசிரியர் வ.புஸ்பரட்ணம் "யாழ்ப்பாணக் கோட்டையில் அண்மைக் காலத் தொல்லியல் ஆய்வுகள் – ஓர் புதிய பார்வை" என்ற தலைப்பிலும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை இம்முறை முன்னாள் துணைவேந்தரும், சிரேஸ்ட பேராசிரியருமான செல்வி வசந்தி அரசரட்ணம் "கல்விப் புலத்தில் பெண்கள் – இலங்கை அரச பல்கலைக் கழகங்களைச் சிறப்பாகக் கொண்டது. என்ற தலைப்பிலும் வழங்கவுள்ளனர் என்றார்.

தொடர்ந்து, யாழ். பல்கலைக்கழக கொவிட் 19 தடுப்பு, முகாமைத்துவக் குழுவின் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி எஸ். சுரேந்திரகுமாரன் கருத்துத் தெரிவிக்கையில் –

யாழ். மாவட்டத்தினுள்ளே கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் ஏற்பட்டு விடலாம் என்பதைக் கருத்தில் கொண்டு, அதற்கேற்ற வகையில் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவை நடாத்துவதற்கு ஏற்ற வகையில், சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களைக் கருத்தில் எடுத்து, எங்களுடைய மாணவர்களுக்கு இந்தப் பட்டமளிப்பைச் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக இந்தப் பட்டமளிப்பு விழாவை ஏற்பாடு செய்திருக்கிறோம். உள்ளக அரங்கில் மாணவர்களை உள்வாங்கும் போது, சகலரையும் பதிவுக்கு உட்படுத்தி, அவர்களிடையே சமூக இடைவெளியைத் தெளிவாகப் பேணி, அவர்களிடம் எதுவித நோய் அறிகுறியும் இல்லை என்பதை உறுதிப் படுத்திய பின்னரே அனுமதிக்கவிருக்கிறோம். உள்ளக அரங்கு மிகுந்த காற்றோட்டம் உள்ளதாகக் காணப்படுவதால் ஏற்கனவே சுகாதாரப் பகுதியினர் அறிவித்தபடி, ஒரே நேரத்தில் 150 பட்டதாரிகள் மட்டுமே உள்வாங்கப்படவுள்ளனர். அதற்கமைய ஒவ்வொரு அமர்வும், மேலும் மூன்று அமர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்துக்கு ஒரு சமூகப் பொறுப்பு உண்டு. அதனால் அனைத்தையும் கருத்தில் கொண்டே நிகழ்வு திட்டமிடப்பட்டுள்ளது. முக்கியமாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் எம்முடன் தொடர்பு கொண்டவண்ணமுள்ளனர். அவர்களின் அறிவுறுத்தல்களையும், சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களையும் கவனத்தில் எடுத்துள்ளோம். தற்போதைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டே நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன. மாற்றங்கள் ஏற்படுமாயின் அதற்கேற்றவாறு பட்டமளிப்பு விழாவை நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

## பளையில் பல ஏக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த விடயத்தை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டுகொள்ளாமலிருப்பது வருத்தமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பளை பகுதியில் காணி சீர்திருத்த ஆணைக்குழு வுக்குச் சொந்தமாக 3 ஆயிரம் ஏக்கர் காணியுள்ளது. அந்தப் பகுதியில் சீன நிறுவனத் துக்கும், சிங்கள முதலாளிகளுக்கும் அரசு காணி வழங்கவுள்ளதாக நம்பத்தகுந்த செய்தி எமக்குக் கிடைத்துள்ளது.

தமிழ் மக்களின் காணிகளைப் பறிமுதல் செய்து சீனக்காரருக்குக் கொடுக்க, சிங்களவர்களுக்குக் கொடுக்க முன்னாயத்த நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

பளையில், புதுக்காட்டுச் சந்திக்கு அண்மையில் தேசிய காணி அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 287 ஏக்கர் தென்னந்தோட்டங்கள் உள்ளன.

அதை சிங்கள முதலாளிகளுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தக் காணிகளை யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர்கள் கேட்டும், அவர்களுக்கு வழங்காமல் சிங்கள முதலாளிகளுக்கு வழங்கப்படுகின்றது.

அரசியல் பிரச்சினையில்லை, அபிவிருத்தி நடந்தால் போதும் என அரசு கூறிக்கொண்டிருக்கின்றது. அபிவிருத்தி என்ற பெயரில் தமிழர்களின் காணிகளைப் பிடுங்கி சீனக்காரருக்கும், சிங்களவர்களுக்கும் கொடுக்கும் நடவடிக்கையைத்தான் இந்த அரசு மேற்கொள்கின்றது.

அரசு, இராணுவம் அனைவரும் கூட்டாக இதனைச் செய்கின்றார்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதைக் கண்டுகொள்ளாமலிருப்பது வருத்தமானது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரத்துக்கு மாற்ற முயல்வதும் இதற்குத்தான்.

இந்த மாற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். வடக்குக்கான பிராந்திய அலுவலகம் வடமத்திய மாகாணத்துக்கு மாற்றுவதை ஏற்க முடியாது.

பளையில் சீனா அல்லது வேறு நிறுவனங்களுக்குக் காணி கொடுப்பதை நிறுத்த வேண்டும். இந்தப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் காணி கேட்டு விண்ணப்பித்துள்ளனர்.

அவர்களுக்குக் காணி வழங்காமல் சீனக்காரருக்கும், சிங்களவர்களுக்கும் வழங்குவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இனிவரும் நாள்களில் பெரும் போராட்டங்களுக்குத் தமிழ் மக்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டிய சூழலுக்கு அரசு தள்ளுகின்றது – என்றார்.

## முக்கிய கட்டத்தை அடைந்துள்ள பொருளாதாரப் பிரச்சினைகள்!



கொழும்பு, பெப்.19

அரசாங்கத்தின் பொருளாதார பிரச்சினைகள் ஒரு முக்கிய கட்டத்தை எட்டியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், கடந்த சில வாரங்களாக நாட்டில் அமெரிக்கடொலர் இருப்புப்படிப்படியாக குறைந்து வருவதாகவும் கூறினார்.

இதேவேளை, உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை கடந்த சில நாள்களில் கடுமையாக அதிகரித்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடிசில்வா சுட்டிக்காட்டினார்.

ஆகவே, மாத இறுதிக்குள், அரசாங்கம் உள்நாட்டு எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டும் அல்லது எரிபொருளுக்கு விதிக்கப்படும் வரியைக் குறைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் நிறைவில் 480 கோடி டொலர் வெளிநாட்டு இருப்பு இருந்ததாகவும் தற்போது அது குறைவடைந்திருப்பதாகவும் மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ. டி.லக்ஷ்மன் கடந்த வாரம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நன்னீர் மீன்பிடி வள்ளம் முல்லையில் வழங்கல்!



முல்லைத்தீவு மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீனவ சங்கங்களுக்கு மீன்பிடி வள்ளங்கள் நேற்று(வியாழக்கிழமை) குறித்த கிராம சேவகர் பிரிவுகளில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் ஆர்.5.என் செயற்றிட்டத்தின் மூலமாக தென்னியன் குளம், அம்பலப்பெருமாள் குளம், ஐயன் குளம், தேறாங்கண்டல் குளம், கோட்டைகட்டிய குளம் ஆகிய நன்னீர் மீனவ சங்கங்களிடம் 39 வள்ளங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஐயன்கன்குளம் நன்னீர் மீனவ சங்கத்துக்கு 10 வள்ளங்களும், அம்பலப்பெருமாள் குளம் கிராமிய மீனவ அமைப்பிற்கு 05 வள்ளங்களும், கோட்டைகட்டிய குளம் நன்னீர் மீனவ சங்கத்துக்கு 05 வள்ளங்களும், தென்னியன்குளம் கிராமிய அமைப்பிற்கு 10வள்ளங்களும், தேறாங்கண்டல் கிராமிய மீனவ அமைப்பிற்கு 09 வள்ளங்களுமாக 39 வள்ளங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்றிட்டத்தின் ஒரு வள்ளத்தின் பெறுமதி 68 ஆயிரத்து 615 ரூபா 75 சதம் ஆகும். உலக உணவுத் திட்டத்தின் இந்தச் செயற்றிட்டம் மக்களின் போசணை மட்டத்தை உயர்த்தி, அதனூடாக அம்மக்களின் போசாக்கான உணவைப் பொருளாதாரத்தை அவர்களே மேம்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந் நிகழ்வில் மாவட்ட உலக உணவுத் திட்ட பொறுப்பதிகாரியும் சமுர்த்தி பணிப்பாளர்திருமதிது.கணேசமூர்த்தி, துணுக்காய் பிரதேச செயலாளர் ஆ.லதுமீரா, உலக உணவுத் திட்ட உத்தியோகத்தர்கள், தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின்) உதவிப் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், குறித்த கிராம மட்ட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராமசேவகர்கள் மற்றும் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பட்டோர் கலந்துகொண்டனர்.

இந்தச் செயற்றிட்டத்தின் மூலமாக முதற்கட்டமாக குறித்த மீனவ சங்கங்களின் குளங்களில் நன்னீர் மீன் குஞ்சுகள் விடுவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டமையைத் தொடர்ந்து, தற்போது மூன்றாம் கட்டமாக நன்னீர் மீன்பிடி வள்ளங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவருக்கு (65 வயது) உறுப்புமாற்று சிகிச்சை செய்வதற்கு 'ஓ நெகட்டிவ்' அல்லது ஓ பொசிட்டிவ் ( O - or O + ) சிறுநீரகம் தேவைப்படுகிறது. வழங்குநர்கள் 25 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்ட ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கலாம். மதுப்பழக்கம், புகைப்பழக்கம் இல்லாதவராகவும் நீரிழிவு போன்ற நோய்களினால் பாதிக்கப்படாதவராவும் இருக்கவேண்டும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

011 2331906 அல்லது 077 577 4852 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

## வவுனியாவில் நூதன திருட்டு!

வவுனியாவில் பணம் தருவதாகக் கூறி நூதனமான முறையில் பொதுமக்களை ஏமாற்றும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன எனப் பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கையில் -

குறிப்பாக கிராமப்புறங்களில் வசிப்பவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் தொலைபேசி இலக்கங்களை பெற்றுக்கொள்ளும் மர்ம நபர்கள்அவர்களுக்குஅழைப்பை ஏற்படுத்தி அவர்களது குடும்ப சூழல் தொடர்பாக விசாரித்து பாசாங்கு செய்தனர்.

பின்னர் அவர்களுக்குப் பண உதவி செய்வதாகத் தெரிவித்து நம்பவைப்பதுடன் பணத்தை உங்களுக்கு வழங்கவேண்டுமானால் சிறுதொகை பணத்தை இ.இசற்காஷ்மூலம்தமதுதொலைபேசி இலக்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்துள்ளனர். பணத்தை அனுப்பிய சற்று நேரத்தில்உங்களதுபணம்வங்கி கணக்கில் வைப்பிலிடப்படும் என்று நம்பவைத்துள்ளனர்.

இதனை நம்பி பலர் மூவாயிரம் தொடக்கம் 5 ஆயிரம் ரூபா வரையிலான பணத்தை இ - இசற்காஷ் மூலம் அவர்களுக்கு அனுப்பியுள்ளனர். அதன்பின்னர் குறித்த நபர்களின் தொலைபேசி இலக்கம் நிறுத்தப்பட்ட நிலையில், தாம் ஏமாற்றப்பட்டுள்ளமையை பின்னரே உணர்ந்துள்ளனர்.

குறித்த சம்பவங்கள் வவுனியாவின் கிராமப்புறங்களில் அதிகமாக பதிவாகிவருகின்ற நிலையில் பொதுமக்கள் இந்த விடயத்தில் அவதானமாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.







கல்யாண மாலையின் இணைந்த சேவை நிறுவனம்

வீடு, காணி, விற்பனைக்கு உண்டு

01.செம்மணி வீதியில் நாயன்மார்கட்டு கேணியடியில் 18 பரப்பு காணி
02.பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை கிழக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்பு காணி.
03.யாழ் பிறவுண் வீதியில் கந்தர்மடம் சந்திக்கு அருகாமை 4 பரப்பு காணி
04.யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 4 பரப்பு காணி
05.றக்கா வீதியில் வீடும் 8 பரப்பு காணியும்.
06.யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 5 பரப்பு காணி.
07.யாழ் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் 6 பரப்பு காணி - ஆகியன உண்டு

077 343 4415 077 857 8528




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.02.2021 இல் வெளியிடப்பெற்றது.

# தீச்சட்டி ஏந்தி மாபெரும் போராட்டங்கள் காணாமலாக்கப்பட்ட உறவுகள் அழைப்பு!

நாளை சனிக்கிழமை தீச்சட்டி போராட்டத்துக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

கிளிநொச்சியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து நாளை 4 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் குறித்த தினத்தன்று தீச்சட்டி போராட்டமாக முன்னெடுக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது, குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் தலைவி கனகரஞ்சினி மேலும் தெரிவிக்கையில் –

உண்மைக்கு நீதிக்குமான இந்தப் போராட்டம் சர்வதேசத்தின் ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்வதற்காக தொடர் போராட்டத்தை ஆரம்பித்திருந்தோம். எங்களுடைய உறவுகள் எமக்கு கிடைக்கும்வரையும், அவர்களுக்கான நீதி கிடைக்கும்வரையிலும் போராட்டத்தை கைவிடப்போவதில்லை.

நாளை 20 ஆம் திகதி வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து தமிழ் உறவுகளும் எமக்கு பலம் சேர்க்க வேண்டும். அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிராம மட்ட அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், போக்குவரத்து கழகங்கள், அரசியல் பேதமின்றி அனைத்து அரசியல்வாதிகளும் அன்றைய தினம் நடைபெறவுள்ள தீச்சட்டி பேரணியில் கலந்துகொண்டு எங்களுக்கான நீதி கிடைக்க வலு சேர்க்குமாறும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த தீச்சட்டி பேரணி கிளிநொச்சி பிள்ளையார் ஆலய முன்றிலிலிருந்து கிளிநொச்சிகந்தசுவாமி ஆலய முன்றிலை சென்றடையும். இந்த போராட்டம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இடம்பெறவுள்ள நிலையில் எமக்ககான நீதியை சர்வதேசம் பெற்றுத் தருவதற்காக சர்வதேசத்தில் உள்ள அனைவரினது நெஞ்சங்களிலும் பதியப்பட வேண்டும்.



எமது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வந்தவர்களும், எமக்கு நீதி கிடைக்கவேண்டும்என்று எண்ணுகின்ற அனைவரும் 20ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள பேரணியில் கலந்து கொண்டு எமக்கு வலுச் சேர்க்க வேண்டும் என அவர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

# இந்த நாட்டை பாதுகாக்குமாறு நாம் கடவுளிடம் மன்றாடுவோம்!

## பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை

இந்த நாட்டை பாதுகாக்குமாறு நாம் அனைவரும் கடவுளிடம் மன்றாடுவோம் என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

திருநீற்றுப் புதன் சிறப்பு வழிபாடு கடந்த புதன்கிழமை கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் மறையுரையாற்றும் போதே பேராயர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் மறையுரையாற்றிய அவர் –

இன, மத ரீதியில் மக்களை பிளவுபடுத்துவதற்கு வெளிநாட்டு சக்திகள் முயற்சிக்கின்றன. அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், முஸ்லிம் என்றில்லாமல் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியம். இந்த நாட்டை பாதுகாக்குமாறு நாம் அனைவரும் கடவுளிடம் மன்றாடுவோம்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு இதே தவக் காலத்தை நாம் நிறைவுசெய்து ஈஸ்டர் பண்டிகையை கொண்டாட ஆயத்தமாகும் போதே கொடூரமான குண்டுத் தாக்குதல் மூலம் மக்கள் இதே ஆலயத்தில் திருப்பலியின் போது பலர் கொல்லப்பட்டனர்.



அது ஒரு திட்டமிடப்பட்ட சம்பவம். அந்தத் திட்டமிடப்பட்ட சம்பவம் தொடர்பில் நாம் நீதியைக் கோருகின்றோம். குற்றங்கள் மன்னிக்கப்படலாம் எனினும் குற்றங்கள் மறைக்கப்பட்டு விடக்கூடாது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் நாம் திருப்திப்படும் வகையில் இல்லை. அது தொடர்பில் நாம் இறைவனிடம் முறையிடுவோம். அவரது நீதிமன்றத்துக்கு செல்வோம். சுயநல செயற்பாடுகளால் இந்த நாடு பின்னோக்கி செல்ல விடக்கூடாது.

நூற்றுக்கணக்கான பேரை பலி கொண்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் நீதிபெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அது ஒரு தேசிய பொறுப்பாகும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

குற்றங்களை மன்னிக்கலாம். எனினும் இனியும் இவ்வாறான கொடூர சம்பவங்கள் நடக்காமல் பாதுகாப்பது அவசியம். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவம் திட்டமிடப்பட்ட ஒன்று. சில குழுக்களால் அல்லது வெளிநாட்டு சக்திகளினால் அது திட்டமிடப்பட்டிருக்கலாம்.

எமது தாய் நாட்டில் இன, மதங்களுக்கிடையில் பேதங்களை ஏற்படுத்துவதற்காக வெளிநாட்டு சக்திகள் மேற்கொண்ட முயற்சியாகவும் இருக்கலாம். அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது நாட்டைப் பாதுகாப்பதற்காக கடவுளிடம் மன்றாடுவோம்.

இதனை நாட்டில் வாழும் அனைத்து இன, மத மக்களுக்கும் நான் ஒரு வேண்டுகோளாக விடுக்கிறேன். இது எம் அனைவரினதும் நாடு. நாம் அனைவரும் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் சுயாதீனமாகவும் இந்த நாட்டில் வாழ வேண்டும். புதிய கலாசாரம் ஒன்றை இந்த நாட்டில் உருவாக்க வேண்டும். சர்வதேச சக்திகள் எமது நாட்டுக்குள் தலையிடுவதற்கு நாம் இடமளிக்கக்கூடாது. இந்தத் தவக்காலத்தில் பல்வேறு ஒறுத்தல் முயற்சிகளோடு கிறிஸ்தவர்கள் அதற்காக விஷேடமாக இறைவனிடம் மன்றாட வேண்டும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தான் பிரதமரின் நாடாளுமன்ற உரை இரத்து செய்யப்பட்டமை ஏமாற்றமாக உள்ளது!

## எச்.எம்.எம். ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் நாடாளுமன்ற உரை இரத்து செய்யப்பட்டமை ஏமாற்றமாக உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள எண்ணியுள்ள பாகிஸ்தானிய பிரதமர் இம்ரான்கானின் விஜயத்தின் போது இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார் என அறிவிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் திடீரென அவரது நாடாளுமன்ற உரை இரத்து செய்யப்பட்டது ஜனநாயகத்தின் மீது கொண்ட நம்பிக்கைக்கு எதிரான செயலாகவே பார்க்கமுடிகிறது.

இம்ரான்கானின் இலங்கை நாடாளுமன்ற விசேட உரையில் அவர் எந்த விடயங்களை பேசப் போகிறார் என இலங்கை மக்கள் மட்டுமல்லாது சர்வதேசமே உன்னிப்பாக நோக்கிக் கொண்டிருந்த இந்த சூழ்நிலையில் அவரின் உரை ரத்து செய்யப்பட்ட செய்தி வெளியாகியுள்ளமை பலத்த ஏமாற்றத்தையும் கவலையையும் தோற்றுவித்துள்ளது.

இலங்கையின் நட்பு நாடுகளில் முதன்மையான சர்வதேச ஒற்றுமையை வலியுறுத்தி தனது அரசியலை முன்னெடுக்கும் பாகிஸ்தானிய பிரதமருக்கு இவ்வாறான தர்மசங்கட நிலையை உருவாக்கி அவமானத்தை உண்டாக்கியுள்ள இந்த செயற்பாடானது இலங்கை அரசாங்க ராஜதந்திர போக்கின் தொய்வு நிலையைக் காட்டுகிறது.

ஜனநாயக வலிமை, நீதி, நியாயத்தை வலியுறுத்தல் உட்பட இலங்கையின் பல்லின மக்களின் பிரச்சினைகளை இலங்கை நாடாளுமன்றத்தில் பேசி இலங்கை அரசாங்கத்துக்கு வேண்டுகோளை முன்வைப்பார் என இலங்கை சிறுபான்மை மக்கள் மத்தியில் நம்பிக்கை பரவியிருந்த நிலையிலையே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கமும், சபாநாயகரும் மீள் ஆலோசனை செய்து பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் இலங்கை நாடாளுமன்ற விசேட உரையை உறுதிப்படுத்த முன்வர வேண்டும். – என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

# கொரோனாவால் உயிரிழந்த இளைஞருக்கு 2 ஆவது பி.சி.ஆர். கோரிய மனு தள்ளுபடி!

கொழும்பு, ஜன.19

கொரோனா தொற்று காரணமாகவே உயிரிழந்த இளைஞருக்கு இரண்டாவது முறையாக பரிசோதனை செய்ய வேண்டும் எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ளது.

மனுதாரர் மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அளித்த சமர்ப்பணங்களை கருத்தில் கொண்டு நீதியரசர்கள் அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாய துன்னே கொரயா ஆகியோர் அடங்கிய அமர்வு மனுவை நிராகரித்தது.

சட்டமா அதிபரை பிரதிநிதித்துவப்படுத்தி முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், இந்த மனுவை விசாரணைக்கு உட்படுத்தாமல் தள்ளுபடி செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வைக் கேட்டுக்கொண்டார்.

இருப்பினும் பி.சி.ஆர் சோதனைகள் தவறான முடிவைத் தரக்கூடும் என உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும், எனவே, ஆரம்ப பரிசோதனை செல்லுபடியானது என உறுதிப்படுத்த இரண்டாவது பரிசோதனையை நடத்த கோருவதாக மனுதாரரை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி மன்றுரைத்தார்.

திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர், களுபோவில வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 31ஆம் திகதி உயிரிழந்தார்.

இதனையடுத்து, குறித்த இளைஞர் கொரோனாத் தொற்று காரணமாகவே உயிரிழந்தார் என, வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் வரை, சடலத்தை தகனம் செய்வதை தவிர்க்கும் வகையில் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி, உயிரிழந்த நபரின் தந்தையால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டது.